


# யாத்திராகமம்



ஜெப நேர புத்தகம்

## யாத்திராகமம் : வரலாற்றுப் பின்னணி

பழைய ஏற்பாட்டில் மீட்கப்படுவது என்பது யாத்திராகமத்தில் ஆரம்பகால நிகழ்வாக இருக்கின்றது. தேவன் தம்முடைய மக்களை அடிமைதளத்திலிருந்து எகிப்திலிருந்து விடுதலை செய்து, சீனாய் மலையில் அவர்களோடு உடன்படிக்கை பண்ணி, இறுதியாக அவர்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் கொண்டு சேர்த்தார். யாத்திராகமம் "EXODUS" என்கிற வார்த்தை கிரேக்க மொழியிலிருந்து கையாளப்பட்டிருக்கிறது. யாத்திராகமம் "EXODUS" புறப்படுதல் அல்லது வெளியேறுதல் என பொருள் கொள்ளலாம்.

யாத்திராகமம் "தெய்வீகம் மீட்கப்படுதல்" என்கிற புத்தகமாக இருக்கின்றது. அடிமைதளத்தில் இருந்த மக்கள் எவ்வாறு எகிப்தியரின் இரும்புக் காவலில் இருந்து அவர்களுடைய விடுதலையை பெற்றுகொண்டார்கள் என்பதை இது நமக்குவிவரிக்கிறது. (உபாகமம் 4:20) வசனங்களின் மூலமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறவைகள் எல்லாவற்றிக்கும் பார்வோனிடமிருந்து விடுதலை அடைந்தது முன்மாதியாக இருக்கின்றது. நம்முடைய பாவங்களில் இருந்து விடுதலை அடைவதை புரிந்துகொள்வதற்கு பின்னணியாகவும் விளங்குகிறது. ஆட்டுக்குட்டியோடு பலியிடும் நியமம் தொடங்கப்பட்டது. உடன்படிக்கை முத்திரையிடப்படுதலும், ஆசாரியர்கள் தூய்மையாக்கப்படுதலும் யாத்திராகமத்தில் சொல்லப்பட்டுள்ள மற்ற நியமங்கள்.

தொழுது கொள்ளுகிற நியமம் யாத்திராகம காலத்தில்தான் ஆரம்பமானது. தேவனை தொழுது கொள்வதற்கு பரிசுத்தமான ஒரு கட்டிடம் நிரந்தர குடியிருப்பாக இருக்கிறது. அது தேவாலயத்தில் தொடர்ந்து செய்யப்பட்டது.

வேதாகம அடிப்படையிலான சில நியமங்கள் யாத்திராகமத்தின் மூலமாக நமக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அது பிரபலமான பத்துக் கட்டளைகள். மோசே ஒரு தீர்க்கதரிசியாக தனியொருவராக பங்காற்றியதை யாத்திராகமத்தில் காணலாம். மேலும் மோசே தேவனுக்கு முன்பாக வல்லமையுள்ள ஒரு மத்தியஸ்தராக மாறினார். யாத்திராகமத்தில் நாம் கற்றுக் கொள்ளும் மிக முக்கியமான நியமங்களில் உடன்படிக்கையின் தத்துவார்த்தம் மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

யாத்திராகம நிகழ்வுகள் எப்பொழுது என்பது குறிப்பாக நமக்கு தெரியவில்லை. கிறிஸ்து பிறப்பதற்கு முன் 1300–1250 ஆம் ஆண்டு இடைப்பட்ட காலமாக இருக்கலாம். இந்த காலத்தில்தான் எகிப்திய சாம்ராஜ்ஜியம் உச்சகட்டத்தில் இருந்தது.

அந்த காலத்தில் தேவன் என்ன நிகழ்த்தினாரோ அவைகள் தொடர்ந்து நம்மை ஆச்சரியப்படவைக்கிறது. தேவன் சொன்னதுபோல எகிப்திய நாட்டிலிருந்தும், அடிமைத்தளத்திலிருந்தும் உன்னை விடுதலை பண்ணினவராகிய நானே தேவன், உன்னுடைய தேவன்.

## சுதந்திரத்திலிருந்து அடிமைத்தளம் வரை (யாத்.1) நாள் : 1

ஆதியாகமத்தின் படி யோசேப்பின் காலத்தில் இஸ்ரவேல் எகிப்திற்கு ஒரு முறை வரவேற்கப்பட்ட விருந்தினராவார். (ஆதியாகமம் 47:5) யாக்கோபுவும் அவனுடைய பிள்ளைகளும் சுதந்திரவாளிகளாக எகிப்திற்கு வந்திருந்தார்கள் மேலும் யோசேப்பு தன் புத்திக் கூர்மையினால் எகிப்தில் ஏற்பட்ட மிகவும் கொடுமையான பஞ்ச காலத்திலிருந்து எகிப்து நாட்டை காப்பாற்றினான். பின்பாக யோசேப்பைப்பற்றி அறிந்திராத ஒரு அரசன் வந்தான்.

இப்பொழுது தேவ ஆசீர்வாதத்தினால் இஸ்ரவேல் மக்கள் எண்ணிக்கையில் மிகுதியும் பலுகிப்பெருகினார்கள். விழுந்து போன ஆபிராகாமின் சந்ததி வானத்திலிருக்கும் எண்ணற்ற நட்சத்திரங்களைப் போலாவார்கள் என தேவன் அளித்த வாக்குறுதி நிறைவேறும் வண்ணமாக இது இருந்தது. (ஆதியாகமம்15:5)

ஆனால் இது அந்த அரசனுக்கு ஒரு அச்சுறுத்தலாக இருந்தது. அவனுடைய அச்சத்தின் காரணமாக தெளிவற்ற அந்த அரசன் நிலைமையை சாதுர்யமாக கையாண்டு இஸ்ரவேல் மக்களை ஒடுக்கி, கடினமாக உழைப்பதற்கு பலவந்தப்படுத்தியும், அவர்களுடைய வாழ்க்கையே கசந்து போகிற அளவுக்கு அவர்களை இரக்கமற்ற முறையில் நடத்தினான் என்பதைப் பாருங்கள். பயப்படுதலின் செயல் இவ்வாறாக இருக்கின்றது. பயம் நம்மை கட்டுப்படுத்தி கொடுஞ்செயல்களையும், மதியீனமான காரியங்களையும்செய்யப்பண்ணும்.

அடிமைகளாக்குவது மாத்திரம் அவனுடைய பிரச்சனைக்கு தீர்வாகாது. பார்வோன் அதிகப்படியாக நெருக்கடி கொடுத்தான். காரியங்களை தன்வசப் படுத்திக்கொண்டு கொலைசெய்யும்படி கட்டளையிட்டான். என்னத்தை தொடங்குகிறோமா அதையே சந்திப்போம் என்பதையும், பத்தாவது பிளேக் மூலமாக முதற்பேற்றின் மரணம், (பார்வோனின் முதற்பேற்றின் மரணம்) இவைகளை பார்வோன் அறியாது இருந்தான். நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம் என்கிற உண்மையையே இது காட்டுகிறது. (கலாத்தியர் 6: 7,8)

ஆனபோதிலும் அந்த செவிலித்தாய்கள் தேவனுக்கு பயந்தார்கள். எகிப்தின் இராஜாவுக்கு பயப்படுகிறவர்களாக இருப்பதைக் காட்டிலும் என்றென்றும் நிலைத்திருப்பவராகிய இராஜாவாகிய தேவனுக்கு பயந்தார்கள். ஆகையால் தேவன் அவர்கள் மீது இரக்கமாக இருந்தார். தேவன், தமக்கு பயப்படுகிற அனைவர்மீதும் கருணை உள்ளவராக இருக்கிறார்.

நீங்கள் தேவனுக்கு பயப்படுகிறீர்களா ? கண்ணுக்கு தெரிகிற இராஜாவை விட, கண்காதுக்கு காணாதவராக இருக்கிற இராஜாவாகிய தேவனுடைய வார்த்தைக்கு மேலான இடம் கொடுக்கிறீர்களா ? இந்த செவிலித்தாய்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளக்கூடிய நிறைய காரியங்கள் இருக்கின்றன. அவர்கள் பணக்காரர்களாவோ, மிகவும் படித்தவர்களாகவோ அல்லது புத்திக் கூர்மையுள்ளவர்களாகவோ இல்லை. ஆனால் அவர்கள் தேவனுக்கு பயந்திருந்தார்கள். இதுதான் இறுதியான காரியமாக இருக்கிறது.

செயல்முறை பயப்படுதலினால், நீங்கள் செய்யும் முட்டாள் தனமான காரியங்கள் எவை ?

"அன்பிலே பயமில்லை ; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது; பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல." ( I யோவான் 4:18)

## விடுவிப்பவரின் வெளிப்பாடு (யாத்.2) நாள் : 2

பார்வோனின் கொடுமைகள் அளவுக்கு மேலாக பெருகிய அந்த சமயத்தில் தான் விடுவிக்கிறவன் பிறந்தான். விசுவாசத்தினால் மோசேயின் பெற்றோர்கள் அவனை மறைத்து வைத்தார்கள். (எபிரேயர் 11:23) மோசஸ் சாதாரண குழந்தை இல்லை என அவர்கள் கண்டார்கள். ஏன் என்றால் அவர்களுடைய விசுவாசத்தினால் இராஜாவுடைய உத்தரவுக்கு பயப்படாதிருந்தார்கள்.

மூன்று மாதங்களுக்கு மேலாக குழந்தையை மறைத்துவைக்க முடியாததால் ஒரு நாணற் கூடையில் மறைத்து ஆற்றோடு போக விட்டார்கள். எந்த உதவியும் இல்லாமல் மோசே ஆற்றோடு போனான். இருந்த போதிலும் அவனுக்கு யாராலும் எந்த சேதமும் ஏற்படவில்லை. நாம் பெரும்பாலும் உதாசீனப்படுத்தப்படும் போதும், திக்கற்றவர்களாக தோன்றும் போதும், மிக அதிகமாக தேவன் நம்மோடு பிரசன்னமாக இருக்கிறார். பார்வோன் இஸ்ரவேலரை கொடூரமாக வகை தேடுகையில் அவனுடைய சொந்தமகள் எபிரேய குழந்தை மீது பரிதாபம் காட்டுகிறவளாக இருந்தாள். அது மட்டுமல்லாமல் மோசே எபிரேயன் என்பதை அறியாமலேயே இஸ்ரவேலரை விடுவிக்கிறவனை பாதுகாத்து, மோசேயை வளர்ப்பதற்காக அவனுடைய தாயையே அவனுக்கு செவிலித்தாயாக நியமித்தாள். முடிவாக மோசே பார்வோனுடைய மகளின் மகனாகவே நடத்தப்பட்டான்.

மோசஸ் தானே தலையிட்டு இஸ்ரவேலருக்கு உதவ விரும்பினான். மோசேயைப்பற்றி எபிரேயர் 11:24–25 வசனத்தின் மூலமாக என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நாமும் படித்துப்பார்க்கலாம். பாவத்தினால் ஏற்படும் சந்தோஷத்தை கொஞ்சநேரம் கூட கழிக்க விரும்பாத மோசே, தேவ சந்ததியாரோடு கீழ்த்தரமாக நடத்தப்படுவதையே விரும்பினான்.

மேலும் இரண்டு எபிரேயர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறை முடித்துவைக்க முயன்றான். அதற்கு ஒருவன் எங்களுக்கு மேலாக உன்னை அதிகாரியாக வைத்ததுயார் ? என்று கேட்டான். தான் ஒரு எகிப்தியனைக் கொன்றதைப் பற்றி தெரிந்துவிட்டது என அறிந்து கொண்ட மோசஸ் பயந்து போய் ஒடிவிட முடிவு செய்து, மீதியான் என சொல்லப்படும் வேறு இடத்திற்கு ஓடிப்போனான்.

இஸ்ரவேலருக்கு உதவிசெய்யும் மோசேயினுடைய முயற்சி தோல்வியில் முடிவடைந்தது. அங்கே மோசஸ் சிப்போராள் என்பவளை மணந்து கெர்சேலம் என்ற மகனைப் பெற்றான். பல ஆண்டுகள் கழிந்த பின்னும் இஸ்ரவேலர் தொடர்ந்து அடிமைத்தளத்தில் இருந்து உதவிக்காக கதறினார்கள். தேவன் அவர்களின் குரலைக் கேட்டு அவர்களுடைய முன்னோர்களுக்கு தாம் செய்து

கொடுத்த வாக்குத்தத்தத்தை நினைவு கூர்ந்தார். வாக்குத்தத்தத்தின்படியும் மேலும் இஸ்ரவேலர் மீது கவலை கொண்டதாலும், அவர்கள் மீது தேவன் கண்ணோக்காமல் இருந்தார்.

எதையோ செய்தார்கள் என்பதற்காக தேவன் இஸ்ரவேலர் மீது கவலைக் கொள்ளாமல், ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு போன்றவர்களுக்கு செய்து கொடுத்த வாக்குத்தத்தின் நிமித்தம் கவலை கொண்டார். கவலை கொள்கிறவர் என்பதை தேவனுடைய இருதயம் காட்டுகிறது. தேவன் கவலை கொள்கிறவராக இருப்பதால் இரட்சிப்பு சாத்தியமாக இருக்கிறது. தேவனின் இந்த மன உருக்கமான குணாதிசயத்தை நாம் போற்ற வேண்டும்.

செயல்முறை : நீங்கள் தேவனை அறியவேண்டும் என்பதற்காக, அவர் உங்கள் வாழ்க்கையில் நடத்திய வித்தியாசமான நிகழ்ச்சிகளை நினைவுகூர்ந்து அவரை துதியுங்கள்.

"அன்றியும் அவருடைய தீர்மானத்தின் படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." (ரோமர் 8:28)

## மோசேயின் அழைப்பு ( யாத். 3 ) நாள் : 3

மோசேயின் வாழ்க்கையை மூன்று நாற்பது ஆண்டுகளாக பிரிக்கலாம். (வசனம் 1– 6) முதல் நாற்பது ஆண்டுகளில் அவன் பார்வோனின் அரண்மனையில் இளவரசனாக இருந்தான். இரண்டாவது, மீதியானில் ஆடுகளை மேய்ப்பவனாக இருந்தான். மோசேயைப் போன்ற பின்னணி மற்றும் கல்வி தகுதி உடையவர்கள் இந்த வேலையை செய்வது கீழ்த்தரமாக காட்சியளிக்கலாம் இருப்பினும் மோசே அதில் திருப்தியாக இருந்தான். இந்த இடத்தில் தான் அவன் தாழ்மையையும், மனரம்யத்தையும் கற்றுக்கொண்டான். அதனால், தேவன் மோசேயை அவனுடைய தாழ்மைக்காகவே உயர்த்தினாரேயன்றி அவனுடைய திறமைக்காக அல்ல என்று பார்க்கிறோம்.

மோசே ஒரு முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிந்ததை கண்டான். முட்செடி எரிந்து இருப்பினும் வெந்து போகமலிருந்தது. தேவன், மோசேக்கு ஒரு அழைப்பு விடுத்தார், அதற்கு உடனடியாக அவன் பதிலளித்தான். தன்னுடைய பாதரட்சையை கழற்றிப்போட்டது அவனுடைய மரியாதை மற்றும் கீழ்ப்படிதலை காண்பிக்கின்றது. நாம் தேவனை மரியாதையுடன் அணுகவேண்டும். அவரை அணுகும் போது நம்மிடம் உள்ள அசட்டை, மூர்க்கம், அவமரியாதையை கவனமாக தவிர்க்கவேண்டும். மோசே தேவனை நோக்கி பார்க்கமுடியாமல் பயத்துடனும் நாணத்துடனும் தன் முகத்தை மூடிக்கொண்டான். நாம் எவ்வளவுக்கு அதிகமாக தேவனையும் அவர் கிருபையையும் அவர் உடன்படிக்கையின் அன்பையும் பார்க்கிறோமோ அவ்வளவுக்கு அதிகமாக நாம் மரியாதையுடனும், தெய்வீக பயத்துடனும் ஆராதனை செய்ய வேண்டும்.



கர்த்தர் இஸ்ரவேல் மக்களின் உபத்திரவத்தை பார்த்தார் (வசனம் 7–10) தேவன் தம்முடைய ஜனங்களுடைய உபத்திரவங்கள், அவர்களுடைய இரகசிய உபத்திரவங்களைக்கூட அறிந்திருக்கிறார். தேவன் தம்முடைய ஜனங்களின் கூக்குரலைக் கேட்டார். ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் படும் வேதனையை கண்டார். ஆளோட்டிகளைவிட தேவன் மேலானவர்.

தேவன் சீக்கிரமான விடுதலையை அளிக்கக்கூடியவர். இன்றைய உலகத்தில் கூட அநேகர் ஆத்மிக எகிப்தில் ஆத்மீக அடிமைகளாக இருக்கிறார்கள். பாவத்தில் இருந்த நாமும் கூட கிறிஸ்துவுக்குள் விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். ஆரம்பத்தில் இஸ்ரவேல் மக்களை, தானே விடுதலை செய்யப்போவதாக மோசே நினைத்திருந்தான் (வசனம் 11–15). அதற்கான காரியங்களில் தன்னை மிகவும் வேகமாக ஈடுபடுத்திக்கொண்டான். ஆனால் எகிப்தை விட்டு சீக்கிரமாக ஒடிப்போக வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த முதல் சம்பவத்திற்கு பின்,அநேக ஆண்டுகள் கழித்து பார்க்கும் போது ஆரம்பத்தில் இருந்த தன்னம்பிக்கையும், விசுவாசமும், உற்சாகமும் இல்லாமல் போயிற்று. இப்போமுதோ "பார்வோனிடத்துக்குப் போக..... நான் எம்மாத்திரம்" என்றான்."

அநேக வேலைகளில் நாம் தேவனுடைய வேலையை செய்வதற்கு நம் மேலும், நம் திறமைகள் மேலும் நம்பிக்கையை இழந்துவிடுகின்றோம். காரியங்களை சாதிப்பதற்கு, தேவன் ஒருவர் மட்டும் நம் பட்சத்தில் இருந்தால் போதும். தேவன் மக்களுடைய மனங்களையும், அவர்கள் செவிகளையும் திறக்க வல்லவர் (வசனம் 16–22). இஸ்ரவேலின் மூப்பர்கள் மோசேக்கு செவிகொடுப்பார்கள் என்பதையும் அதற்கு மாறாக பார்வோன் மோசேக்கு செவிகொடுப்போவதில்லை. தேவனுடைய வல்லமையுள்ள கரத்தின் வற்புறுத்துதலினாலேயன்றி பார்வோன் செவிகொடுக்கமாட்டான் என்பதையும் தேவன் முன்கூட்டியே தெரிவித்துவிட்டார். கிறிஸ்துவர்களாகிய நமக்கும், உலகத்திற்காக திட்டத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். நம்முடைய பங்கையும் அதன் பிரதிபலனையும் வெளிப்படுத்தியிருக்கிறார். தேவனுடைய திட்டங்களின் படி செயல்பட நாம் விருப்பமுடையவர்களாய் இருக்கிறோமா ?

செயல்முறை : உங்களுக்கான தேவனுடைய அழைப்பு என்ன ? அதற்கு நீங்கள் எப்படி பதிலளித்துக் கொண்டிருக்கிறீர்கள் ?

" இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளை தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப்போனார்." (I பேதுரு 2:21)

## தேவனுடைய நாமங்கள்

தேவன் தாமே கிருபை கூர்ந்தவராகி தம்முடைய மக்களுக்கு முழு வேதாகமத்தின் வாயிலாக தம்மைப்பற்றி பொருத்தமான சூழ்நிலைகளில் வெளிப்படுத்தி உள்ளார். தேவனுடைய பிரபலமான ஒரு சில நாமங்களின் பட்டியலை பார்ப்போம்.

* எல் ஷடாய் : ஆதியாகமம் 17 :1 இந்த நாமத்தை மொழி பெயர்க்கும் போது தேவன் பலம் பொருந்தியவர்; சக்தியை வழங்குகிறவர் என்கிற அர்த்தமாகிறது. தேவனுடைய இந்த நாமத்தின் பொருள் பலம் பொருந்திய எல்லையற்ற, போஷிக்கிற, திருப்தி அளிக்கிற, கொடுக்கின்ற எனவும் சொல்லலாம்.

* யாஹ்வே அல்லது யெகோவா : யாத்ராகமம் 3:15 – தேவன் உடன்படிக்கையை காப்பாற்றுகிறவர் என இதற்கு பொருள். இந்த பெயர் பழைய ஏற்பாட்டில் 6,300 முறை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. யாஹ்வே என்பது கூட தேவன் அவராகவே இருக்கிறார் என்றும், நான் நானே, நானேன்றால் நானே, நானாக இருக்கிறேன் அதே நானாக இருக்கிறேன் என தேவன் சொல்வதாகும்.

* யெகோவா – ஷமாய் : யெகோவா அங்கே இருக்கின்றார் (எசேக்கியேல் 48: 30–35 ) விடுதலையாகிதிரும்பிக்கொண்டிருக்கின்ற அடிமைகள் தாங்கள் கட்டப்போகிற நகரத்தில் யெகோவா அங்கே இருக்கிறார் என கண்டு கொள்வார்கள். தேவன் உத்தேசிக்கும் இடத்தில் நம்மைவழிநடத்திக் கொண்டிருக்கின்றார்,காத்திருந்து ஆசீர்வதிக்கிறார் என்பதை நாம் தேடி கண்டடையலாம்.

* யெகோவா–யிரே–யெகோவா ஆயத்தப்படுத்துகிறவர்(ஆதியாகமம் 22:14)–தேவன் ஆபிரகாமுக்கு ஆட்டுக்குட்டியை ஆயத்தப்படுத்தினார் மேலும் கல்வாரி மலையின் மேல் நமக்கும் கூட ஆயத்தப்படுத்தினார்.

* எல்–ராய் : தேவன் கண்ணோக்குகிறவர். ( ஆதியாகமம் 16 : 13 ) தேவன் காண்கிற தேவன், ஒருவரையும் தேவன் காணாதிருப்பதில்லை: தேவனுடைய பார்வைக்கு ஒருவரும் தப்புவதும் இல்லை.

* யெகோவா – நிதி : யேகோ நம்முடைய ஜெயக்கொடி (யாத்ராகமம்,17:15)– பகைவர்களுக்கு மேலாக வெற்றிக் கொடிபறக்கும் இடத்தில்தேவன் முன் நடக்கிறவராக இருக்கிறார். வெற்றி தேவனைச் சார்ந்ததாக இருக்கிறது.

## அற்புதங்களின் தேவன் ( யாத். 4 ) நாள் : 4

மோசேயின் ஆயுதங்கள் (வசனம் 1–9), மக்களுக்கு அடையாளத்தை காண்பிக்காத பட்சத்தில் அவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அற்புதங்களை நடப்பிக்க தேவன் அவனுக்கு வல்லமை கொடுக்கின்றார். தேவன் மோசேக்காக வடிவமைத்த வேலையை செய்வதற்கு அவன் தயங்கினான். அவுனிடம் கோழைத்தனமும், சோம்பலும், அவிசுவாசமும் அதிகமாக காணப்பட்டது.

தேவன் சிலவேளைகளில் திறமைகளில் குறைவுப்பட்டவர்களை தம்முடைய தூதுவர்களாக தேர்ந்தெடுக்கின்றார் ஏனென்றால் அவருடைய கிருபை இன்னும் அதிக மகிமையைக் கொண்டுவரும். கிறிஸ்துவின் சீஷர்கள் சொற்பொழிவாளர்களாக இருக்கவில்லை, இருப்பினும் பரிசுத்த ஆவியானவர் அவர்களை அவ்வாறாக மாற்றினார்.



தேவன் மோசேயின் சாக்கு போக்குகளுக்கு ஒவ்வொன்றாக பதிலளித்தார். நம்முடைய கடமையிலிருந்து தடுப்பது அல்லது நம்முடைய கடமையை செய்வதற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் தன்னம்பிக்கையற்ற தன்மையும் கூட தேவனுக்கு பிரியமற்றதாக இருக்கின்றது.

இந்த ஆபத்தான வேலையிலிருந்து மோசே பின்தங்கினான் என்று நாம் சுலபமாக பழிபோட்டு விடலாம். ஆனால், நம் இருதயங்களை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது, நாம் ஆபத்தற்ற கடமையைக் கூட செய்ய தவறிவிடுகிறோம். முட்செடியில் மோசேக்கு தரிசனமானதிலிருந்து, தேவன் மோசேவிடம் அடிக்கடி பேசினார். (வசனம் 18–23).

பார்வோன் இஸ்ரவேலர்களின் அழுகுரலை பொருட்படுத்தாமல் தன் இருதயத்தை கடினப்படுத்திக் கொண்டான், தேவனும் அவருடைய வழியில் நீதியான நியாயத்தீர்ப்பை அவனுடைய இருதய கடினத்தினிமித்தம் அற்புதங்கள் மற்றும் வாதைகள் மூலம் வழங்கினார். ஆனால் பார்வோன் ஏற்றுக்கொள்வதாக இருந்தாலும் சரி, பின் வாங்குவதாக இருந்தாலும் சரி, மோசே அவனுக்கு சொல்ல வேண்டிய கடமையை செய்ய வேண்டியதாக இருந்தது.

தேவன் மோசேயை சந்திக்கும் போது கோபத்துடன் இருந்தார்.(வசனம் 24 – 31) அவனுடைய மகனை விருத்தசேதனம் செய்யாவிட்டால் மரணத்தையோ அல்லது வியாதியையோ அவன் மேல் கொண்டு வருவதாக பயமுறுத்தினார். நம்முடைய வாழ்க்கையில் என்ன தவறு என்று தேவன் வெளிப்படுத்தும் போது, நாம் அதை மாற்றிக்கொள்ள தீவிரமாக இருக்க வேண்டும்.

இது தான் சிட்சையின் குரல்; நம்மை சிட்சிப்பவரிடம் திருப்புவதற்கு அழைப்பு விடுக்கின்றது. மூப்பர்கள் மோசேயை சந்திக்கும் போது விசுவாசத்தை அவனிடம் பார்த்தார்கள், அவனுக்கு கீழ்ப்படிய தயாராக இருந்தார்கள். அநேக வேலைகளில், தேவனுடைய திட்டத்தில் எதிர்பார்த்ததைவிட குறைவான கடினமே இருக்கும். அவருடைய சித்தத்தின்படி செய்வது அவருக்கு மகிமையை கொண்டுவரும்.

நாம் எழுந்து, தேவன் நம்மிடம் எதிர்ப்பார்த்ததைச்செய்வோம். தேவன் நம்மோடு கூட இருந்து, நம்மை செழிப்பாக்குபவராக இஸ்ரவேலர்கள் தங்களுடைய விடுதலையின் நற்செய்தியை வரவேற்று தேவனைவழிப்பட்டார்கள் என்றால், நாம் எந்த அளவிற்கு இரட்சிப்பின் நற்செய்தியை வரவேற்கவேண்டும். நாம் அதை விசுவாசத்துடன் அரவணைத்து, நம்முடைய இரட்சகரை ஆராதிக்கவேண்டும்.

செயல்முறை: தேவனுடைய வேலையை செய்வதற்கு தடையாக இருக்கும் சில காரியங்கள் என்ன ?

“ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.” (எபேசியர் 2 :10 )

## வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட விடுதலை (யாத்.5,6) நாள் :5

மோசே தேவனிடம்கோபப்படும் போது கூட, தேவன் மிகவும் பொறுமையோடு இருந்தார் மேலும் பார்வோனை தாழ்மைப்படுத்தினால் தான் இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து அனுப்புவான் என்ற திட்டங்களை பற்றியும் தெரிவித்தார். ஒரு விஷயத்தை நாம் யோசித்துப் பார்க்கும்போது தேவனே அதை நிறைவேற்ற போவதாக வலியுறுத்துகின்றார். யாத்திராகமம் 6:1ல் "நான் பார்வோனுக்குச் செய்வதை இப்பொழுது காண்பாய்; பலத்த கையைக் கண்டு அவர்களை போகவிட்டு, பலத்த கையைக் கண்டு அவர்களை தன் தேசத்திலிருந்து துரத்திவிடுவான் என்றார்."

தன்னுடைய பங்கில் பிரச்சனை வரும் என்பதில் மோசே கவலைப்பட்டானேயொழிய இஸ்ரவேலர்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்று யோசிக்கவில்லை. தேவன் மோசேயைப் பார்த்து "கவலைப்படாதே" என்று சொன்னார். அது உன்னுடைய காரியம் அல்ல. ஆனால் என்னுடையது! இஸ்ரவேலர்களை காப்பாற்றுவதற்கு இரண்டு காரணங்களை தேவன் தருகின்றார்.

(1) ஆபிராகாம், ஈசாக்கு, யாக்கோபுவிற்கு கொடுத்த வாக்குத்தத்தை நிறைவேற்றுவதற்காக (அவர் உண்மையுள்ள தேவன்)

(2) ஏனென்றால், வேதனையிலிருந்து தேவனிடம் கூக்குரலிட்ட போது, அதை பார்த்து மனதுருகினார். யாத்திராகமம் 6:6-9ல் தேவன் என்ன செய்யப்போவதாக சொன்னாரோ, அதை இஸ்ரவேலர்களிடம் தெரியப்படுத்தினான். ஆனால் அவர்கள் தங்களுடைய மனச்சோர்வினாலும்,கொடிய அடிமைத்தனத்தினாலும் அவனுக்கு செவிகொடுக்கவில்லை. இப்படி பிரச்சனை வரும் போது நினைப்பது மனித இயல்பு. "தேவன் எங்கே இருக்கிறார்?" "தேவன் நம்மோடிருந்தால், நான் ஏன் பிரச்சனைகளை அனுபவிக்கவேண்டும்?" போன்றவை.

நமக்கு சோக சம்பவம் நடக்கும் போது, நாம் எப்படி பதிலளிக்கிறோம்? எந்த சிலகாரியங்களை நீங்கள் சந்திக்க பயப்படுகிறீர்கள்? யாத்திராகமம் 6:10ல் "கர்த்தர் மோசேயை நோக்கி: நீ பார்வோனிடத்தில் போய், அவன் தன் தேசத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரைப் போகவிடும்படி அவனேயே பேசு என்றார்." ஆனால் மோசேயோ "இஸ்ரவேல் புத்திரரே எனக்குச் செவிக்கொடுக்கவில்லை, பார்வோன் எனக்கு எப்படிச் செவிக்கொடுப்பான்? நான் விருத்தசேதனமில்லாத உதடுள்ளவன் என்றான்." வசனம் 28-30ல் பார்க்கும் போது, மோசே எந்த அளவிற்கு அவனுடைய பெலவீனங்களில் நோக்கமாக இருந்தான் 'என்று பார்க்கிறோம். மேலும் அவனுடைய ஊழியத்திற்கு அவனுடைய திறமைகளில் சார்ந்திருக்கவேண்டிய அவசியமில்லை, தேவனை சார்ந்திருந்தால் தான் வெற்றி என்பதை புரிந்துக் கொள்ள நீண்ட நேரம் தேவைப்பட்டது!

உங்கள் பெலவீனங்களைப்பற்றியோ, குறைவுப்பட்ட தாலந்துகள் அல்லது திறமைகள், தோற்றம் அல்லது வேறு ஏதாவது குறைபாடுகளைப்பற்றி நீங்கள் கவலைப்படுகிறீர்களா? உங்கள் நம்பிக்கை, உங்கள் திறமைகள், தாலந்துகள், தோற்றம், குடும்பபின்னணி, படிப்பு அல்லது வேறு ஏதாவதை சார்ந்ததாக இருக்கின்றதா?

பவுலின் முடிவுரையை நினைவில் கொள்ளுங்கள்: IIகொரி 12:7-10"........அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன், ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும்,துன்பங்களிலும்,இடுக்கண்களிலும்,நான் பிரியப்படுகிறேன்." மேலும் I கொரி 1:26-31ல் "......... ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார், பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துக் கொண்டார்........".

செயல்முறை : எந்த சில காரியங்களை நாம் எதிர்நோக்கி பயப்படுகின்றோம்?

"இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாய் இருப்பவன் யார்?" (ரோமர் 8: 31)

## தேவனின் விரல் ( யாத். 7,8 ) நாள் : 6

மோசே எகிப்தில் அநேக அற்புதங்களை செய்தான். எகிப்தின் மந்திரவாதிகளும் தங்கள் மந்திரவித்தையினால் தங்கள் கோல்களை சர்ப்பமாக்கினார்கள் (7:11), அவர்களும் தண்ணீரை இரத்தமாக மாற்றினார்கள் (7:22), அவர்களும் தவளைகளை வரப்பண்ணினார்கள் (8:7). இந்த மந்திர வித்தையினால் அவர்களும் தேவனைப் போல வல்லமையுள்ளவர்கள் என்று நினைத்துக் கொண்டார்கள். இப்படித்தான் அவர்கள் வஞ்சகனாகிய சாத்தான் கிரியை செய்கிறான். ( 2தெச 2: 9-12 ) வஞ்சகன் போலியான அற்புதங்களை செய்கிறான்!! தேவனிடத்திலிருந்து மக்களை திசைத்திருப்புவதே அவனுடைய குறிக்கோள். ஆனால் தேவன் பேன்களை பிறப்பித்த போது, அவர்களும் எப்போதும் போல முயற்சி செய்தார்கள் ஆனால் அவர்களால் கூடாமற் போயிற்று! (8:18) மந்திரவாதிகளின் கண்கள் (தேவனின் வல்லமையை பார்த்த போது) திறக்கப்பட்டது.

(யாத் 8:19) " மந்திரவாதிகள் பார்வோனை நோக்கி: இது தேவனுடைய விரல் என்றார்கள்". " இது தேவனுடைய விரல்" என்று அவர்கள் உணர்ந்த போதும், தேவனிடம் திரும்பவோ, அவருக்கு ஒப்புவிக்கவேயில்லை. எவ்வளவு அடிக்கடி நாம் "தேவனுடைய விரலை உணர்ந்துகொள்ளுகிறோம்"? நம்முடைய பதில் அதற்கு எப்படி இருக்கின்றது? நாம் அவருக்கு ஒப்புவிக்கிறோமா அல்லது எகிப்திய மந்திரவாதிகள் மற்றும் பார்வோனைப்போல மறந்து விடுகிறோமா? யாக்கோபு 1:22-25 " நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களாயும் இருங்கள்." தினமும் வேதத்தை வாசித்து அதிலிருந்து ஒரு விஷயத்தின்படி செய்தால் நம்முடைய வாழ்க்கை எப்படியிருக்குமென்று யோசித்துப்பாருங்கள்!

தேவனுடைய விரலைப் பார்த்து அவரிடத்திற்கு திரும்ப விருப்பமற்றவர்களாயிருந்தால், அவர் இன்னும் நமக்கு அழுத்தத்தை கொடுப்பார், நம்மை அழிப்பதற்காக அல்ல, நாம் மனந்திரும்புவதற்காகவும் நம்மை இரட்சிப்பதற்காகவும் தான். ஏனென்றால் நாம் தொடர்ந்து பாவம் செய்து கொண்டிருந்தால், தேவன் மனஸ்தாபப்படுவார், அது அவருடைய இருதயத்துக்கு விசனமாயிருக்கும். (ஆதி 6:6) ஆனால் ஒரு பாவி மனந்திரும்பும்போது சந்தோஷப்படுகிறார் (லூக் 15:7) யோனாவை யோசித்துப்பாருங்கள், அவன் மாறும் வரைக்கும் புயல்காற்றை அனுப்பி மீனின் வயிற்றில் இருக்கச்செய்தார். அவன் மீனின் வயிற்றில் மனந்திரும்பினான்! தேவன் நீடிய பொறுமையுள்ளவர்: ஆனால் நம் நன்மைக்காக, நாம் மாறும் வரை அவர் அழுத்தத்தைக் கொடுப்பார்.

தேவன் இஸ்ரவேலர்களுக்கு சிட்சையை கொண்டுவந்ததைப்பற்றி பவுல் சொன்ன பிறகு, அவன் I கொரி 10: 6–13 (வசனம் 6) "அவர்கள் இச்சித்ததுப்போல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்குத் திருஷ்டாந்திரங்களாயிருக்கிறது." (வசனம்.11) " இவைகளெல்லாம் திருஷ்டாந்திரங்களாக சம்பவித்து, உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது". இப்படியிருக்க, நிற்கிறவனென்று எண்ணுகிறவன், விழாதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்கக்கடவன்! பவுல், வசனம் 13ல் உற்சாகப்படுத்ததலோடு முடிக்கிறதைப் பார்க்கிறோம். அதாவது நம்முடைய திராணிக்கு மேலாக, சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடம்கொடாமல், நாம் பாவம் செய்யாதபடிக்கு அதற்குத் தப்பிக் கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார்!

<u>செயல்முறை :</u> நம் வாழ்க்கையில் எந்த சில பிரச்சனைகளை/சோதனைகளை மேற்கொள்ளுவது கடினம் என்று நினைக்கிறோம் ?

"மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல்...."
(1 கொரிந்தியர் 10 : 13 )

## கொள்ளை நோய்கள் (யாத். 9,10) நாள் : 7

தேவனுடையசித்தம் அல்லது திட்டத்தின்படியே பார்வோனுடனான பலப்பரிட்சை தொடர்ந்து கொண்டு இருப்பதை நாம் காணலாம். கொள்ளை நோயை தவிர்த்து இஸ்ரவேலரை விடுவிப்பதற்கு பார்வோன் மீது தேவன் ஒன்றுக்கு மேலாக கருணை காட்டியும் அவன் மறுத்து விட்டான். அவன் தன் இருதயத்தைக் கடினப் படுத்திக் கொண்டான். (யாத் 7:13)

இந்த போராட்டம் பார்வோன் மற்றும் எகிப்தியர்களோடு மட்டுமல்ல அவர்கள் வணங்கிய தேவர்களோடும் கூட, என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். (யாத் 121:12) இது தேவனுக்கும் அவருடைய உண்மைக்கும் எதிராக இருந்த எல்லா தேவர்களான, சக்தி, அதிகாரம், நியமம், கற்பனைகள், காணக்கூடாதவைகளுக்கும் எதிராகவும் நடந்தது.



அடிமைகளை விடுவிப்பதற்கு மோசே எடுத்துக் கொண்ட எல்லா முயற்சிகளுக்கும் பார்வோன் எதிர்த்து நின்றான். இந்த பிரச்சனை இப்பொழுது கடுமையாக்கப்பட்டது. எல்லா விதமான கொள்ளை நோய்களும், எகிப்திய கடவுளுக்கு ஒரு சாட்டையடி போல இருந்தது.

* தேவனாக கருதப்பட்ட நைல்நதி இரத்தம் நிறைந்த நதியாக மாறியது. தேவனாகிய நதிக்கு இது பெருத்த அவமானமாயிற்று.
* ஹேக்கா எனும் பேர் கொண்ட தவளை தேவனுக்கு ஆசீர்வாதத்திற்கு மாறாக சாபமானது.
* பேன்கள் ஆலயத்திற்கு அவமானத்திற்கும், ஆலயத்தை மாசுபடுத்துகிறதுமாயிற்று.
* கெப்ரா எனும் தேவனுக்கு வண்டுகள் அவமானத்தை ஏற்படுத்தியது.
* எகிப்திய பசு வணங்குவதற்குரியதாக இருந்தது.
* மக்களை ஆசீர்வதிக்க ஆசாரியர்களால் கூட பயன் படுத்தப்பட்டது. அதுவும் சாபமாக மாறியது.
* நெருப்புக்கும், தண்ணீருக்கும் ஐசிஸ் மற்றும் சொராப்பீஸ் தேவர்களாக இருந்தது, ஆனாலும் அவைகளால் கல் மழையிலிருந்து எகிப்தை காக்க முடியவில்லை.
* வெட்டுக்கிளிகளிமிருந்து அந்த தேவர்களால் காக்க முடியவில்லை.
* இருள் சூழ்ந்த காரணத்தினால் சூரிய தேவனாகிய 'ரா' வும் சாபத்திற்குள்ளாகியது.
* பார்வோன் தெய்வீகமானவனாக கருதப்பட்டான். ஆதலால் சிம்மாசனத்தின் வாரிசான பார்வோனின் முதற்பிறப்பின் மரணம் பேரிடியாக இருந்தது.

இவைகளெல்லாம் நிரூபிக்கமுடியாத வெறும் ஊகம்தான், ஆனால் நாம் உண்மையாய் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் யாஹ்வே எனும் பாக்கிரமமுள்ள தேவனாகிய அடிமைகளின் தேவன் ஆட்சிசெலுத்தினவரும் ஆட்சி செலுத்துகிறவருமாக இருக்கிறார்.

இஸ்ரவேலரின் கர்த்தராகிய தேவன் மிகப் பெரியவர் என்பதும், அவருக்கிணையாக வேறொரு தேவனாகிய நம்முடைய கர்த்தர் இல்லை என்பதும் கொள்ளை நோய்களின் மூலமாக நமக்கு வெளியாகிறது (யாத் 8:10)

<u>செயல்முறை :</u> தேவனுடைய திட்டத்திற்கு நாம் நம் வாழ்க்கையில் எந்தெந்த காரியத்தில் சரணடைகிறோம் / எதிர்த்து நிற்கிறோம்.

"ஆகையால் ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." (I பேதுரு 5:6 )

## இறுதியான கொள்ளை நோய் (யாத்.11,12) நாள்: 8

பார்வோன் தன் இருதய கடினத்தை விட்டு விடுவதற்கு எல்லா முதற் பிறப்பின் இறப்பு, மிகப் பெரிய நாசம் விளைவிக்கக் கூடியதும், எல்லாவற்றிற்கும் இறுதியான மிகப் பெரிய அடிமையாக அமைந்தது. தேவன் சொன்னதுபோல, எகிப்தின் எல்லா தேவர்கள் மீதும் நியாயத் தீர்ப்பை கொண்டு வருவேன் என்பதின் படி, எகிப்திய தேவர்கள் மேல் இது ஒரு இறுதியான வெற்றியாக அமைந்தது. (யாத்திராகமம் 12:12)

இந்த கடைசி கொள்ளைநோய் நடு இரவு வேளையில் ஏற்பட்டது. அந்த நடு இரவு வேளையில் தெரிந்தபடி யாஹ்வே வெற்றி கொண்டவராக இருந்தார். நிச்சயமாகவே இது நம்முடைய தேவனின் பெருந்தன்மையைக் காட்டுகின்றது. அவர் நேசிக்கிறவர், கருணை மிகுந்தவர், இரக்கமுள்ளவர் மேலும் பரம வல்லமை உள்ளவர் என்பதையும் கண்டிப்பாக நாம் மறந்து விடக் கூடாது.

ஒருவரும் அவரை எதிர்த்து நிற்க முடியாது. எபிரேயர் 10:31 வசனம் சொல்வது போல வாழ்ந்து கொண்டிருக்கின்ற தேவனின் கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே. தேவனை எதிர்த்து போராடுவது மிகவும் மதியீனம். பார்வோன் இதை கடினப்பட்டு கற்றுக் கொண்டான். பார்வோன் தான் தன் நிலையில் இல்லை என்பதை பேரழிவுகளும், மேலும் இறப்பும் நிகழ்ந்த பின்பு புரிந்து கொண்டான்.

சகோதரர்களே, சகோதரிகளே, தேவனை நாம் சாதாரணமாக எடுத்துக் கொள்கிறோமா? தேவனுடைய திட்டத்திற்கு நாம் சரணடைவதற்கு இன்னும் எவ்வளவு கொள்ளை நோய்கள் நமக்கு தேவை? நாம் தேவனுடைய பக்கத்தில் சார்ந்து இருக்கிறோமோ?

நாம் கர்த்தருக்கு பயந்து அவரை தொழுது கொள்கிறோமா? உண்மையிலேயே நாம் தேவனுக்கு பயப்படுகிறோமா? தேவனுடைய நியாய தீர்ப்பை எகிப்தியர்கள் சந்தித்தது போல, தேவனால் இஸ்ரவேலர்கள் தங்களுடைய மீட்பை சந்தித்தார்கள்.

ஒவ்வொருவனும் ஒரு ஆட்டுக்குட்டியைக் கொண்டு போய் அதை கொல்ல வேண்டும், அதில் கொஞ்சம் எடுத்து வறுத்து சாப்பிட வேண்டும், மீதமுள்ளதை நெருப்பில் இடவேண்டும். மேலும் இரத்தத்தை எடுத்து அவருடைய வீட்டு வாசலின் நிலையில் தெளிக்கவேண்டும். (யாத் 12:7) இது விசுவாசத்தின் செயல்பாடாக இருந்தது.

இதைத்தான் புதிய ஏற்பாட்டில் நாம் குறிப்பாக சிலுவையில் பார்க்கின்றோம். வாசல் நிலையில் தெளித்த இரத்தம் அடையாளமாக இருக்கிறது. (யாத் 12:13) இயேசு கிறிஸ்து நமக்காக பலியானார். விசுவாசத்தின் மூலமாக அவருடைய இரத்தத்தினால் நாம் மீட்கப்பட்டோம். கிறிஸ்துவுக்குள் நாம் மரணத்திலிருந்து விடுபட்டு ஜீவனுக்குள்ளாகிறோம். (பேதுரு 1:19) வசனத்தின்படி கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நாம் மீட்கப்பட்டோம்.



<u>செயல்முறை:</u> சிலுவை நமக்கு என்ன அர்த்தம் கொடுக்கிறது. உங்கள் வாழ்க்கையில் நெருக்கடியான சூழ்நிலைப்பற்றி நீங்கள் சிந்திக்கும் வேளையில் சிலுவையில் இயேசு கிறிஸ்துவிடமிருந்து கற்றுக் கொள்ளும் காரியங்கள் என்னவாக இருக்கிறது?

"இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும் படிக்கும்."(பிலிப்பியர் 3:10)

## யாத்திராகமம் தொடங்குகிறது ( யாத் :13 ) நாள் : 9

மகத்தான விடுதலைக்குப்பின் யாத்திராகமம் தொடங்குகிறது. இஸ்ரவேலர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி தங்களுடைய பயணத்தைத் தொடங்கினார்கள்.

ஏறக்குறைய இரண்டு வாரம் பயணித்து, கோசேனிலிருந்து பாலஸ்தீனத்திற்கு செல்லும் வழித்தடமானது குறைந்த தொலைவானதும், மணற்பாங்கான பாலைவன மார்க்கமாகவும் இருந்தது. தேவன் அவர்களுக்கு நெடுந்தூர வழித்தடத்தை தெரிந்தெடுத்திருந்தார். (யாத் 13:17–18) தேவன் நமக்கு எப்பொழுதுமே நெடுந்தூர வழித்தடத்தை தேர்வு செய்கிறார், ஏனென்றால் நெடுந்தூர வழித்தடம் நம்மை நல்ல முறையில் வடிவமைக்கும். இதுவே நல்ல வழித்தடமாக இருக்கிறது.

நமக்கு தேவையானவைகள் எல்லாமே துரித கதியில் கிடைக்க வேண்டும் என்கிற காலத்தில் நாம் வாழ்கிறோம். துரித கருந்தோல் (Coffee), துரித உணவு, துரித சந்தோஷமுள்ள குடும்பம், துரிதமாக பணம் ஆனால் தேவனுடைய செயல்திட்டமானது குறுகிய காலவரையாக இருப்பதில்லை, இது நீண்ட காலவரையைக் கொண்டது.

இப்பொழுதே வாங்கு: விலையை பிற்பாடு செலுத்தலாம் என சாத்தான் உரைக்கிறான். ஆனால் தேவன் இப்பொழுது விதைத்திடு: பிற்பாடு அறுவடை செய்யலாம் என்கிறார். ஒழுக்கமானது சமாதானத்தின் பலனாக இருக்கின்றது (எபிரேயர் 12:11) பிறக்கும்போதே குணாதிசயங்களை குழந்தைகளுக்குள்ளாக புகட்டி வளர்ப்பது இல்லை, இது நாளொரு மேனியாகவும், சவால்களுக்கிடையேயும் வளர்க்கப்படுகிறது.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இடமாகிய பரலோகத்திற்கு நாம் உடனடியாக சென்றடைய முடியாது. இதை வாழ்க்கைப் பயணத்தின் மூலமாகத்தான் நாம் சென்றடைய முடியும்.

மேலும் தேவன் நம்மை மீட்டதுமட்டுமல்லாமல், அவர் நம்மை வழிநடத்துகின்றார் என்பவை நற்செய்தியாக இருக்கிறது. தேவ பிரசன்னம் அவர்களோடு இருந்தது என்று யாத்திராகமம் 13:21–22 காட்டுகிறது. தேவ சமுகம் அவர்களுக்கு முன்பாக சென்று தேவன் அவர்களுக்கு பாதையை ஆயத்தப்படுத்தினார்.

தேவன் நமக்கும் பாதையை ஆயத்தமாக்குகின்றார். தேவகிருபையினால் நாம் இரட்சிக்கப்பட்டவர்களாக மாத்திரம் அல்ல, தேவகிருபையினால் நாம் பலப்படுத்தபட்டவர்களாகவும் இருக்கிறோம். (I கொரி 15:10, 2 தீமோத்தேயு 2:1) ஆம், தொடரும் பாதை கடினமானதும், குறுகலானதுமாக இருக்கின்றது. ஆனால் ஆவியானவர் நம்மோடு கூட வழி நடத்திக் கொண்டிருப்பதினால் இது பரபரப்பான சாதனையாக மாறும்.

நாமனைவரும் தேவனுடைய இரட்சிப்பு என்னும் சிறகின் கீழ் வருவோம், அவருடைய விசேஷமான கிருபை எனும் பாதுகாப்பின் கீழ் வருவோம்.


<u>செயல் முறை</u> : ஞானஸ்நானத்திலிருந்து இன்று வரை உங்களுடைய பயணம் எவ்வாறு இருக்கிறது என பிரதிபலிக்கும் வகையில் ஜெபத்தில் நடந்து செல்லுங்கள்.

“நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.” ( 2 தீமோத்தேயு 4: 7,8)

<u>எகிப்திலிருந்து கானான் வரை (வரைப்படத்தின் விளக்கம்)</u>

| | |
|---|---|
| 1. <u>ராமசே</u> | இஸ்ரவேல் எகிப்திலிருந்து வெளியே தள்ளப்பட்டது ( யாத்திராகமம் 12 : எண்ணாகம் 33:5 ) |
| 2. <u>சுக்கோத்</u> | எபிரேயர் முதலாவது முகாந்தரத்திலிருந்து வெளியேறின பின்பு கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார் (யாத் 13: 20–22) |
| 3. <u>ஈரோத்</u> | இஸ்ரவேலர் செங்கடலை கடந்தனர். ( யாத்தி 14: எண்ணா 33:8 ) |
| 4. <u>மாரா</u> | தேவன் மாராவின் கசப்பான தண்ணீரை மதுரமாக்கினார். ( யாத்திரா 15: 23–26 ) |
| 5. <u>ஏலிம்</u> | பன்னிரண்டு நீரூற்றுகளின் மத்தியில் இஸ்ரவேல் பாளயமிறங்கினர். ( யாத்தி 15:27 ) |
| 6. <u>வனாந்தரத்தில் பாவம்</u> | தேவன் இஸ்ரவேலருக்கு மன்னாவாகிய அப்பத்தையும், காடையையும புசிக்கக் கொடுத்தார்(யாத்தி :16) |
| 7. <u>ரெவீதம்</u> | இஸ்ரவேலர் அமேலேக்கியருடன் யுத்தம் பண்ணினார்கள் ( யாத்திராகமம் 17 : 8–16 ) |
| 8. <u>சீனாய் மலை</u> | தேவன் பத்து கட்டளைகளை அருளினார் ( யாத்தி 19–20 ) |
| 9. <u>சீனாய் வனாந்தரம்</u> | இஸ்ரவேலர் தேவனுக்காக பரிசுத்த வாசஸ்தலத்தை கட்டினார்கள். ( யாத்திராகமம் 25–30 ) |

ISRAEL'S EXODUS FROM EGYPT AND ENTRY INTO CANAAN MAP 2




| | |
|---|---|
| 10. <u>வனாந்திர முகாம்கள்</u> | ஜனங்களின் பாரத்தை தனியாய் சுமக்கும் மோசேக்கு உதவிசெய்ய 70 மூப்பர்கள் அழைக்கப்பட்டாரகள். ( எண்ணா 11: 16–17 ) |
| 11. <u>எசியோன் கேபேர்</u> | இஸ்ரவேலர் ஏசா மற்றும் அம்மோன் தேசத்தை அமைதியாக கடந்தனர். (உபாகமம் 2) |
| 12. <u>காதேஷ்–பர்னேயா</u> | மோசே கானான் தேசத்தை சுற்றுப் பார்தது வர மனிதர்களை அனுப்பினான்: இஸ்ரவேலர் பிடிவாதத்துடன் எதிர்த்து, அந்த தேசத்திற்கு செல்லவில்லை. காதேஷ் பல வருடங்களுக்கு முக்கிய முகாமாக செயல்பட்டது. (எண்ணா13:1–3 உபாகம்2:14) |
| 13. <u>கிழக்கு வனாந்திரம்</u> | இஸ்ரவேலர் ஏதோம் மற்றும் மோவாபுடன் சர்ச்சையை தவிர்த்தனர். ( எண்ணா 20: 14–21 : 22–24 ) |

| | |
|---|---|
| 14. அர்னோன் ஆறு | இஸ்ரவேலர் தங்களை எதிர்த்த கானானியரை அழித்தனர். ( உபாகமம் 2: 24-37 ) |
| 15. நேபோ மலை | மோசே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை கண்டார். கடைசி மூன்று பிரசங்கங்களை மோசே பிரசங்கித்தார். ( உபாகமம் 1-32 ) |
| 16. மோவாப் சமவெளி | தேவன் இஸ்ரவேலரிடத்தில் அந்த தேசத்துக் குடிகளைத் துரத்தி அதை சுதந்தரிக்கச் சொன்னார். ( எண்ணாகமம் 33: 50-56 ) |
| 17. யோர்தான் நதி | இஸ்ரவேலர் யோர்தான் நதியைக் கடந்து உலர்ந்த தரையில் நடந்தனர். கில்காலுக்கு அருகில், யோர்தான் நதியிலிருந்து 12 கற்களை எடுத்து இஸ்ரவேலர் புத்திரர் என்றைக்கும் நதியை கடந்ததை நினைப்பூட்டும் அடையாளமாக வைக்கப்பட்டது. ( யோசுவா 3-5 ) |
| 18. எரிகோ | இஸ்ரவேலர் புத்திரர் அந்தப் பட்டணத்தை கைப்பற்றி அழித்தனர். ( யோசுவா 6 ) |

## மீட்பின் பாடல் ( யாத். 14,15 ) நாள் :10

உங்கள் வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும் தண்ணீர் நிற்க, சிவந்த சமுத்திரத்தை இஸ்ரவேலர்களோடு கடந்து செல்வதை கற்பனை செய்து பார்க்க முடிகிறதா ? அதை பார்த்த காட்சியே நம்மை நெகிழவைத்திருக்கும். தேவனால் கூடாதது ஒன்றுமே இல்லை என்பதை இஸ்ரவேலர்களுக்கு காண்பித்தார்.

மோசேயும் இஸ்ரவேலர்களும் பாடிய பாடல் வெற்றியின் பாடல். ஒரு விஷயத்தை நாம் இங்கு கவனித்து பார்க்கும்போது, இதில் மனிதனைப் பற்றி எதுவுமே சொல்லப்படவில்லை: எல்லா மகிமையும் தேவனுக்கே செலுத்தப்பட்டிருந்தது. அவர்கள் தேவனைத் துதித்து ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும் இருந்தார்கள். தேவன் அவர்களை துரத்திக் கொண்டிருந்த பலம் வாய்ந்த பார்வோனின் சேனைகளிடமிருந்து அவர்களை காப்பாற்றினார். மேலும் அவர்களை அடிமைத்தளத்திலிருந்து விடுவித்தார். ஆதி 15:13-16ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேற்றப்பட்டது. அது 430 வருட அடிமைத்தனம் (யாத் 12:40) எல்லோரும் விடுதலையறிந்ததைக் குறித்து உற்சாகப்பட்டார்கள். கடைசியில் விடுதலை அடைந்தார்கள். இனி சஞ்சலங்கள் இல்லை, கற்களை உடைக்க தூக்கி சுமக்கவோ, உடைக்கவோ வேண்டிய அவசியம் இல்லை, இனி அடிமைகள் இல்லை, தண்டனைகள் இல்லை. ஆம்! விடுதலைக்காகத்தான் அவர்கள் ஏங்கிக்கொண்டிருந்தார்கள்!

ஆனால் அவர்கள் சந்தோஷம் நீண்ட காலம் நீடிக்கவில்லை. அவர்கள் வனாந்தரத்தில் 3 நாட்கள் தண்ணீர் இல்லாமல் பிராயணம் செய்தார்கள். பிள்ளைகள், "அம்மா......தண்ணீர்" என்று வேண்டிக் கேட்டதை யோசித்துப்பாருங்கள். கடைசியாக தண்ணீரை கண்டடைந்த போது, அது



கசப்பாக இருந்தது. அதிர்ச்சியை அளித்தது. ஏன் தேவன் தம்முடைய மக்களுக்கு தண்ணீர் வழங்க வேண்டியதை மறந்து விட்டாரா ? என்ற கேள்வி நமக்குள் எழும்புகிறதல்லவா ? இல்லை. இல்லவே இல்லை! இது தேவன் தன் மக்களின் விசுவாசித்தை பரீட்சித்துப் பார்க்கும் முறை. நம்முடைய வாழ்க்கையில் மகிழ்ச்சியான நேரங்கள் இருக்கும். முற்றிலும் நாம் தேவனுக்கு நன்றி சொல்லித் துதிப்போம்.

ஆனால் தேவன் எப்போதுமே நம்முடைய நடவடிக்கைளை பார்ப்பதற்கு சோதனையின் நேரங்களையும் அனுப்புவார். நமக்கு தாகமாக இருக்கும் போது, (தேவனிடத்திலிருந்து எந்த பதிலும்இல்லை) நாம் அப்போது எப்படி நடந்துக் கொள்வோம். நாம் சீக்கிரமாக விட்டுக்கொடுத்து விடுவோமா ? நாம் சோர்ந்து போய் விடுவோமா ? நாம் கசப்பான தண்ணீர்களை சந்திக்கும்போது எப்படி உணருவோம் ? நம் குடும்பத்தில் ஏதாவது தவறாக நடக்கும்போது மற்றவர்களோடு உறவுமுறை பாதிக்கப்படும்போது நாம் இஸ்ரவேலர்களைப் போல முறுமுறுக்க சோதிக்கப்படுகிறோமா ? (15:24)

நம் சோதனையின் நேரம் நீண்ட நாட்கள் நீடிக்கப்போவதில்லை, ஏனென்றால் நம் திராணிக்குத்தக்கதாகத் தான் கொடுப்பார் ( I கொரி 10:13) நம் வாழ்க்கையில் கசப்பான அனுபவங்கள் இருக்கும்போதும் நாம் நீதியாக இருந்தால், தேவன் நமக்கு ஒரு மரத்தை காண்பிப்பார், அதுதண்ணீரை மதுரமாக்கும் தேவன் தெளிவாக சொல்லுகிறார். (15:26) நீங்கள் செவிக்கொடுத்தால் உங்களை வியாதிகளிலிருந்து (பாவம்) காப்பாற்றுவேன், மேலும் உங்களை சுகமாக்குவேன் (இரட்சிப்பு) நாம் தேர்ந்தெடுக்கும் முடிவை எடுக்க, தேவன் நமக்கே சுதந்திரம் கொடுக்கிறார். ஆனால் நாம் சரியான தேர்வுகளை எடுக்கும்போது அவர் அதில் பிரியப்படுகிறார்.

செயல்முறை : சமீபத்தில், உங்களின் சில சவால்தரக்கூடிய நேரங்கள் என்ன ? அதில் நீங்கள் எப்படி நடந்து கொண்டீர்கள் ?

"கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்" ( 2 தீமோத்தேயு 4:18)

## பரகத்திலிருந்து வந்த மன்னா (யாத்.6) நாள் 11

நம் தேவன் நம் இருதயத்தை சோதித்து, நம்மை சுத்திகரித்து சிறந்த கிறிஸ்தவர்களாக மாற்றுகிறார் (உபா 8:1-5) இஸ்ரவேலர்கள், பாவம் என்னும் வனாந்திரத்திற்கு வருகிறார்கள், அந்த இடம் மண்ணினாலும், கல்லுகளாலும் நிறைந்திருந்தது. முழுவதும் வறட்சியாக இருந்தது. அந்த இடத்தில் தான் அவர்கள் சோதிக்கப்பட்டார்கள். அவர்கள் எகிப்திலிருந்து கொண்டுவந்த மாவு, ஒருவேளை அன்றைக்கு தீர்ந்து போயிருக்கலாம், முப்பது நாட்கள் ஆயிற்று, அவர்கள் அப்பத்திற்காக ஏங்கி கலங்கிப் போயிருந்தார்கள், எப்போதும் போல முறுமுறுக்க ஆரம்பித்தார்கள். முழு இஸ்ரவேலர்களும் கோத்திரமும் மோசேக்கு விரோதமாகவும், ஆரோனுக்கு விரோதமாகவும் முறுமுறுத்தார்கள்.

நாம் எதிர்ப்பார்த்தது போல காரியங்கள் சபையிலோ, தேசத்திலோ, நகரத்திலோ நன்றாக நடக்கவில்லை என்றால், அரசியல்வாதிகளுக்கு எதிராகவும், தலைவர்களுக்கு எதிராகவும் பேசுவது அவர்கள் மேல் பழிபோடுவதெல்லாம் இயல்பான காரியம் தான். நம்முடைய கஷ்டமான நேரங்களில் (சீனாய் வனாந்திரம்) முறுமுறுப்பது, குறைகூறுவது, விசுவாசத்தை இழந்துப் போகக்கூடிய சூழ்நிலை வரலாம். தேவன் இந்த நேரங்களை அனுமதித்து நம் பெலவீனங்களை வெளிப்படுத்துகிறார், ஏனென்றால் நம் பெலவீனங்களை அவர் அறிந்திருக்கிறார்.

அவர்கள் குறைகூறிக் கொண்டும், முறுமுறுத்துக் கொண்டும், வணங்கா கழுத்துள்ளவர்களாகவும், நன்றிக்கெட்டவர்களாகவும் இருந்தபோதும் தேவன் அவர்களிடம் அபரிமிதமான தயவுடன் நடந்து கொண்டார். அவர் அக்கினி மழையையும் கொண்டுவரவில்லை. சோதோம் கோமோராவிற்கு செய்தது போல அவர் செய்யவில்லை, அவர்களுடைய சூழ்நிலைக்கு தேவைப்பட்ட மன்னாவைக் கூட அவர் தயார் செய்து கொடுத்தார். வானத்திலிருந்து மன்னாவைப் பொழிந்தார். தேவன் வானத்தின் கதவுகளைத் திறந்து, மன்னாவை அவர்கள் இருந்த இடத்தில் ஆகாரமாக வருவிக்கப்பண்ணினார். ஒவ்வொருவருக்கும் அதிகமாக கிடைக்கும்படிச் செய்தார். அது வானத்திலிருந்து வந்தது சங் 78:24–25 மன்னா ஒருவேளை தேவதூதர்களுக்காக இருக்கலாம். அதனால் தான் வானத்திலிருந்து வந்த அப்பம், தூதர்களின் அப்பம். யோவான் 6:32 கிறிஸ்தவர்களாகிய நமக்கு இயேசுவே வானத்திலிருந்து வந்த அப்பமாயிருக்கிறார். மோசே அதை நமக்கு கொடுக்கவில்லை. ஆனால் நம் பிதாவாகிய தேவனால் கொடுக்கப்பட்டது. நமக்கு ஜீவனைக் கொடுக்கும் அப்பம்.

இஸ்ரவேலின் பிள்ளைகள் மன்னாவை 40 ஆண்டுகள் சாப்பிட்டார்கள், அவர்கள் வாக்குத்தத்த தேசத்தின் எல்லையை அடையும் வரை சாப்பிட்டார்கள் (வசனம் 35) தேவன் கொடுத்த மன்னாவை வாக்குத்தத்த தேச எல்லை வரை சாப்பிட்டு உயிர் வாழ்ந்தார்கள், கிறிஸ்தவர்களாகிய நமக்கு தேவன் தம் வார்த்தையை கொடுத்திருக்கிறார். நமக்கான தேவ வார்த்தையை நாம் தினமும் சாப்பிடும் போது, நம்மால் இறுதி வரை உண்மையாயிருக்க முடியும். தேவனுக்கே மகிமை.

<u>செயல்முறை :</u> சமீபத்தில், வேதத்திலிருந்து எந்த சில வசனங்கள் உங்கள் ஆவிக்குரிய பசியை நிறைவு செய்திருக்கிறது?

“அவர் பிரதியுத்தரமாக; மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.” (மத்தேயு 4:4)

## தண்ணீர் நெருக்கடி (யாத்17) — நாள் 12

மாராவின் தண்ணீர் கசப்பாக இருந்திருக்கலாம். ஆனால் தண்ணீர் இல்லாமல் இருப்பது மிகவும் மோசமான நிலை அல்லவா? அவர்கள் என்ன செய்ய முடியும்? இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லோரும் சீன்வனாந்திரத்திலிருந்து பிரயாணம் பண்ணினார்கள் (வசனம் 1–3). தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு



பலவிதமான பாதைகளில் நம் வாழ்க்கைப் பயணம் இருக்கலாம். ஆனால் நாம் அனைவரும் <u>பாவ</u> வனாந்தரத்திலிருந்து தான் வந்தோம். எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களானோம்.

சீஷர்களாகிய நாம் சில நேரங்களில் எங்கிருந்து வந்தோம் என்பதை மறந்துவிடுகிறோம். அவர்கள் ரெவிதீமிலே வந்து பாளயமிறங்கினார்கள். அது ஒரு பாலைவனம். அவர்களின் களைப்பை போக்குவதற்காக, நிம்மதிக்காக, படுக்கைப் போட்டார்கள்.

அங்கே சில காலம் தங்கலாம் என்று அவர்கள் நினைத்த நிம்மதி மற்றும் ஓய்வின் இடம் தாகத்தின் இடமாக மாறிவிட்டது. அவர்கள் தாகத்தை போக்கிக்கொள்ள தண்ணீரே இல்லை என்பதை கண்டுப்பிடித்தார்கள். அவர்களுடைய தேவை பூர்த்தி செய்யப்படுவதற்காக மோசேயை நோக்கிப் பார்த்தார்கள். அவர்கள் தண்ணீருக்காக மோசேயை திட்டினார்கள் (வாதாடினார்கள்) (வசனம் 2). அவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு தவறானதை நோக்கிக் கொண்டிருந்தார்கள். நாம் கற்றுக் கொள்ள வேண்டியது, “தேவன் மட்டுமே செய்யக் கூடியதை, உலகமோ, அதன் ஐஸ்வரியமோ பூர்த்தி செய்யமுடியாது.”

நாம் தவறானதை நோக்கிப் பார்க்கக்கூடாது. சில வேளைகளில் நாம் உற்சாகங்களை சார்ந்தவர்களாக இருக்கிறோம்; அல்லது மற்றவர்கள் நமக்காக ஜெபிக்கவேண்டும் என்பதை சார்ந்திருக்கிறோம்; யாராவது உதவி செய்ய வேண்டும் ஆனால் நம் தேவனே நமக்கு சகாயர், நாம் அவரை நோக்கி பார்க்கவேண்டும் என்பதை மறந்துவிடுகிறோம். நம் தேவைகளை பூர்த்தி செய்பவர் தேவனே என்பதை அநேக முறை அவர் நமக்கு நினைப்பூட்ட வேண்டியதாக இருக்கின்றது.

அவருடைய ஐஸ்வரியத்தின் படி நம் தேவைகளை தேவன் சந்திப்பார் என்பதை அவர் நமக்கு நினைப்பூட்டுகிறார். நாம் அவருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கும்போது, அவர் நம்மையும் நமக்கு பிரியமானவர்களையும் பார்த்துக் கொள்வார்.

முறுமுறுப்பது முதிர்ச்சியற்ற தன்மையின் அறிகுறிமட்டுமல்லாமல், விசுவாச குறைச்சலையும் காண்பிக்கின்றது. அவர்கள் முறுமுறுப்பை தேவன் நியாயம் தீர்த்ததில் ஆச்சரியமே இல்லை. அவர்கள் குறைகூறுதலை கவனியுங்கள். அவர்கள் மோசேயை நோக்கி: “நீர் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் எங்கள் ஆடு மாடுகளையும் தண்ணீர்த் தாகத்தினால் கொன்று போட எகிப்திலிருந்து ஏன் கொண்டு வந்தீர் என்றார்கள்.”

இன்றைக்கு நாம் எதைக் குறித்து குறை சொல்லிக் கொண்டிருக்கிறோம்? நம்முடைய வளர்ப்பைப் பற்றி குறை சொல்லுகிறோமா? நம் தோற்றம், கணவன், மனைவி, பிள்ளைகள் அல்லது மற்றவர்களைப்பற்றி குறை சொல்லுகிறோமா? நம்முடைய வாழ்க்கையில் சந்திக்கும் ஒவ்வொரு சவால் தரும் சூழ்நிலையை மாற்றுவதற்கு நாம் நினைப்பதற்கும் மேலாக தேவனிடம் வல்லமை இருக்கின்றது.

செயல்முறை : எந்த சில குறைகூறுதலினால் நாம் பின் தங்கியிருக்கிறோம் ? அதை தேவன் எப்படி தீர்ப்பார் என்று நாம் எதிர்ப்பார்க்கிறோம் ?

“நான் வீணாக ஓடினதும் வீணாக பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கடடற்றவர்களும்,தேவனுடையமாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு.”

(பிலிப்பியர் 2: 14,15)

## எத்திரோவின் கொள்கை (யாத் 18) நாள் 13

இஸ்ரவேலர்களை பற்றிய செய்தி அந்த எல்லையெங்கிலும் பரவிற்று. அப்போது இஸ்ரவேலர்கள் எகிப்தைவிட்டு வந்து விட்டார்கள் என்பதையும், சீனாய் மலையின் அருகில் இருப்பதையும் எத்திரோ தெரிந்துக்கொண்டான். அதனால் மோசேயின் மனைவியையும் அவன் இரண்டு பிள்ளைகளையும் ஒப்படைக்க வந்தான். அவர்கள் ஒருவரை ஒருவர் சமாதானத்தோடு வாழ்த்தினார்கள், நன்றாக பேசினார்கள், பிரச்சனைகளைத் தீர்ப்பதைப்பற்றியும், நிர்வாக ஒழுங்கையைப்பற்றியும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு விஷயத்தை வசனம் 11ல் கவனித்தால் எத்திரோவின் எண்ணம் புரிகின்றது “கர்த்தர் எல்லாத் தேவர்களைப்பார்க்கிலும் பெரியவர் என்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன்.” அந்த காலத்தில் வாழ்ந்த மக்கள், எகிப்தின் கடவுள்களைப்பார்க்கிலும் இஸ்ரவேலர்களின் தேவன் பெரியவர் என்பதை உணர்ந்துக் கொண்டார்கள். இது தான் முதன் முதலின் அந்த பழங்கால உலகத்தில் ஏற்பட்டப் போட்டி இது பல கடவுள்கள் என்ற நம்பிக்கைக்கும் ஒரு கடவுள் என்ற நம்பிக்கைக்கும் ஏற்பட்ட போட்டி. இந்த போட்டியில், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர், அவரே ஒரே, மெய்யான ஜீவனுள்ள தேவன் என்பதை தெளிவாக நிரூபித்தார்.

இந்த அதிகாரத்தின் இரண்டாம் பாகத்தில் தலைமைத்துவம்பற்றிய எத்திரோவின் ஆலோசனையைப்பார்க்கிறோம். இந்த அதிகாரத்திலிருந்து அநேக தலைமைத்துவபாடங்களை கற்றுக் கொள்ளலாம்.

தலைமைத்துவம் என்பது நிச்சயமாகவே, மக்களின் தேவைகளை பூர்த்திசெய்வது. தேவனின் சித்தத்தை அறிந்துக் கொள்ள மக்கள் வந்தார்கள் (வசனம் 15) இது தான் தெய்வபக்திக்குறிய தலைமைத்துவம் என்பதாகும்.

* தலைமைத்துவம் என்பது மிகவும் பாரமான காரியம் (வசனம் 18) ஒருவரையோ அல்லது சிலரையோ ஒருவரே பார்த்துக்கொள்ளலாம். பெரிய குழுக்களாக பிரிந்து – அவர்களுடைய தேவைகள் அந்த குழுவால் சந்திக்கப்படவேண்டும்.

* தலைவர்கள் “தேவனுக்கு பயப்படும் திறமைசாலிகளாக இருக்கவேண்டும், அநீதியான லாபத்தை வெறுக்கிற நம்பிக்கைக்கு பாத்திரவான்களாக இருக்க வேண்டும்.” (வசனம் 21). தலைமைத்துவம் என்பது ஒரு பரிசு. மேலும் பொறுப்பாகவும் இருக்கின்றது.



* தலைமைத்துவத்தின் சமநிலை : நம்மால் தாங்கக்கூடிய அளவிற்கு இருக்கும் போது ஜனங்கள் வீட்டிற்கு சுகமாய் போய் சேரலாம். நமக்கு உறுதியான தலைமைத்துவம் தேவை (தாங்கக்கூடியவர்கள்) மற்றும் ஜனங்களுக்கு அக்கறை காட்டுபவர்கள். அதனால் மக்கள் சந்தோஷத்தோடு (திருப்தியோடு) இருப்பார்கள்.

செயல்முறை : வேறுபட்ட தலைமைத்துவ பங்கை யோசித்துப் பாருங்கள் (வீட்டில், உங்கள் வேலையில், சபையில்.....) அதில் அழுத்தம் தரக்கூடிய சூழ்நிலைகளில் நீங்கள் எப்படி கையாண்டீர்கள் ?

“நமக்கு அருளப்பட்டகிருபையின்படியே, நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வார்த்தையுடையவன்விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன். ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்.” (ரோமர்12:6,8)

## உடன் படிக்கை (யாத் 19) நாள் 14

இந்த சமயத்தில் இஸ்ரவேல் மக்கள் ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட உடன்படிக்கையை பற்றிக் கொண்டிருந்தார்கள். மேலும், கோத்திரங்களாக மூப்பர்களுக்கு உட்பட்டிருந்தார்கள். சீனாய் மலையில் நியாயப் பிரமாண உடன்படிக்கை உட்படவேண்டியதாய் இருந்தது. தேவனுடைய ஜாதியாக இருந்தார்கள்.

இதில் முக்கியமாக காணப்படும் காரியங்கள் சில

(1) உடன்படிக்கையின் அடிப்படை : உடன்படிக்கையின் அடிப்படையானது தெய்வீக மீட்பு, “நான் உங்களை என்னண்டையிலே சேர்த்துக் கொண்டேன்” ஒரு மனஉருக்கத்தின் தாயைப் போல, தேவன் இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து வரவழைத்தார். அதைத்தான் தேவன் நமக்கும் கிறிஸ்துவுக்குள்ளாக செய்திருக்கிறார். நாம் தேவனுடைய புத்திரர்களாக ஆகிறோம். தேவனுடைய மன உருக்கத்தில் மீட்பு ஆரம்பிக்கின்றது.

(2) உடன்படிக்கையின் வெகுமதி: யாத் 19:5–6
தேவன் இஸ்ரவேலரை தமக்கென “பொக்கிஷமாக” கருதினார், “ஆசாரிய ராஜ்யம்” மற்றும் “பரிசுத்த ஜாதி” ஒவ்வொரு வார்த்தைகளும் மிகவும் ஆழமானது. அது இப்பொழுது சபை ( I பேதுரு 2:5–9 ).

(3) உடன்படிக்கையின் நிபந்தனைகள் : உடன்படிக்கையின் நிபந்தனை ஒரு மனிதனின் கீழ்ப்படிதலை சார்ந்ததாகயிருந்தது. நாமும் கூட தேவனுடைய கிருபையினாலே, விசுவாசத்தைக் கொண்டும், கிறிஸ்துக்குள் நம்முடைய கீழ்ப்படிதலினாலே இரட்சிக்கப்பட்டோம்!

உடன்படிக்கையின் நிபந்தனைகளை மக்கள் கேட்டபோது, அதை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். "தேவன் சொன்னபடியெல்லாம் நாங்கள் செய்வோம் என்றார்கள்." தேவன் அவர்கள் வார்த்தையை ஏற்றுக் கொண்டு, உடன்படிக்கையின் நிபந்தனைகளைப் பற்றிய காரியங்களை மக்களுக்கு எப்படி தெரிவிப்பது என்று மோசேக்கு சொல்லியிருந்தார்.

1. தேவன் இறங்கி வருகிறார். உடன்படிக்கைக்காக, இருதிறத்தாரும் சந்திக்க வேண்டும். இஸ்ரவேல் மக்களோடு உடன்படிக்கைக்காக தேவனே இறங்கி வந்தார். இது தான் வேதாகம இரட்சிப்பின் உட்கருத்து : தேவன் மனிதனிடம் வந்தார்!

2. மக்கள் தங்களை சுத்திகரிக்க வேண்டும். தேவனை சந்திக்க தயாராக இருந்தார்கள். நம்மை நாம் கேட்க வேண்டிய கேள்வி என்னவென்றால், "ஒரு பரிசுத்தமுள்ள தேவன் என்னைப் போன்ற பாவியோடு கூட எப்படி அந்நியோன்யம் வைக்க முடியும் ?" அதுவே இரட்சிப்பை உணர்ந்துக் கொள்ளும் திறவுகோல்

3. சிறந்த பதில் என்னவென்றால் "பயமும், நடுக்கமும்" (20: 18–20), இதைப் பற்றி அடுத்த அதிகாரத்தில் கற்றுக் கொள்ளலாம்.

<u>செயல்முறை</u> : நீங்கள் தேவனுக்கு என்னவாக இருக்கிறீர்கள். நீங்கள் தேவனுக்கு இருக்கும் ஐந்து விஷயங்களை யோசித்துப் பாருங்கள்.

"நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1 பேதுரு2:9)

## கிருபையும் விதியும்

நம்மில் அனேகருக்கு பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டிருக்கிற மீட்பைப் பற்றியும், தேவனுடைய பிரமாணங்களை கைக்கொண்ட மக்கள் மாத்திரமே மீட்கப்பட்டார்கள் எனவும் நினைக்கின்றோம். மேலும் பழைய ஏற்பாட்டில், தேவனுடைய கிருபையை கண்டுபிடிக்க நமக்கு கடினமாக இருக்கிறது. இந்த பிரச்சனைகளை நாம் புரிந்து கொள்வதற்கு உதவியாக சில வழிமுறைகளை வைத்திருக்கிறோம்.

முதலாவதாக மீட்பு என்றால் என்ன ? பழைய ஏற்பாட்டின்படியாக இருந்தாலும், புதிய ஏற்பாட்டின்படியாக இருந்தாலும் மீட்பு என்பதற்கு பொருள் என்ன? மீட்கப்படுவது என்கிற சொல்லானது பகைவனிடமிருந்து விடுவிப்பது: ஆசீர்வாதம் பெறுவது, என பல பொருள் இருந்தாலும், ஒருவனை பாவத்திலிருந்து மன்னிப்பது அல்லது பாவத்திலிருந்து விடுவிப்பது என்பதையே இறுதியான பொருளாக கொள்ளலாம். இதை சில வசனங்கள் மூலம் ஒப்பிட்டுப்பார்க்கலாம்.



(சங்கீதம் 103 : 12, ஏசாயா 1 : 18 , ஏசாயா 38 : 17 , ஏசாயா 44 : 22, மீகா 7 : 19) ஆதலால் பழைய ஏற்பாட்டிலும் பாவங்கள் நிச்சயமாக மன்னிக்கப்பட்டு இருக்கின்றன. எனவே அவர்களும் மீட்கப்பட்டவர்கள் என பொருளாகிறது. மோசே, எலிஜா, ஆபிரகாம் போன்றவர்களும் இரட்சிப்பை அடைந்தார்கள் என புதிய ஏற்பாட்டிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் எபிரேயர் 10:4 வசனத்தின் பிரகாரம் மாடுகளின் இரத்தமோ, ஆடுகளின் இரத்தமோ பாவங்களை எடுத்துப்போட முடியாது என அறிகிறோம்.

பழைய ஏற்பாட்டின்படி பாவ மன்னிப்பு எவ்வாறு கொடுக்கப்பட்டது ? நாம் இதை தெளிவாக புரிந்து கொள்ளவேண்டுமானால் மன்னிப்பின் அடிப்படைக்கும், மன்னிப்பின் தன்மைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை புரிந்துகொள்ளவேண்டும். சிலுவையில் இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக தேவன் காட்டிய கிருபையே அப்பொழுதும் பாவமன்னிப்புக்கு உண்மையான அடிப்படையாக இருக்கிறது. பழைய ஏற்பாட்டின் விலங்குகளை பலி இட்டு மன்னிப்பை பெறுவது அடிப்படையாகாது. ஆனால் அது மன்னிப்பின் முறைமையாக கருதலாம்.

விசுவாசம், கீழ்ப்படிதல், அறிக்கைசெய்தல், மனந்திரும்புதல், ஞானஸ்நானம் போன்ற வெளிச்சத்தில் தொடரும் சில முறைமைகள் புதிய ஏற்பாட்டிலும் நமக்கு இருக்கிறது. மன்னிப்புக்கான முறைமைகள் மாறி இருக்கிறது. ஆனால் மன்னிப்புக்கு அடிமையான தேவனுடைய கிருபையானது இன்னும் அப்படி இருக்கிறது. மீட்பில் மனிதனுடைய பங்கு முறைமையாக இருக்கிறதே ஒழிய அடிப்படையானது இல்லை.

மீட்பை நாமாக எப்போதும் சம்பாதிக்க முடியாது. இது ஒரு வரம். நம்முடைய நீதியினால் நம்மை தேவன் மன்னிக்கவில்லை. ஆனால் தேவன் கிருபை பொருந்தியவராக இருக்கின்றார். இதை நாம் புரிந்து கொள்ளும் போது, நாம் நன்றியுணர்வோடு இருப்பதற்கும், ஒப்புக்காக செய்வதற்குமான வித்தியாசத்தை கொண்டுவரும். இவைகள் புதிய ஏற்பாட்டிலும் வலியுறுத்தப்படுகிறது. யோவான் 14 :15, 15:10, 1 யோவான் 2: 3–5, 3:24

விசுவாசத்தைப் பற்றிய விதி ரோமர் 3:27
ஆவியைப்பற்றிய விதி ரோமர் 8:2
கிறிஸ்துவின் விதி கலாத்தியர் 6 :2
விடுதலைப்பற்றிய விதி யாக்கோபு 1:25, 2:12
கிறிஸ்துவின் விதி 1 கொரிந்தியர் 9 :21
புதிய உடன்படிக்கையின் விதி எபிரேயர் 7:12, 8:10, 10 : 28–31

முடிவாக நாம் தேவனுடைய கிருபையினால் மீட்கப்பட்டவர்களாகவும், மீட்கப்படுகிறவர்களாகவும் (இயேசுவின் இரத்தத்தினால்) ஆவோம். மேலும் நாம் மீட்கப்பட்டவர்களாக இருப்பதற்கு விதியானது வழிகாட்டியாக உதவிகிறது.

## பத்து கட்டளைகள் (யாத். 20) நாள் 15

எகிப்திலிருந்து இஸ்ரவேலர்களை மீட்ட தேவன், அவர்கள் பரிசுத்தமாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.

பத்து கட்டளையை பார்க்கும் போது ஒரு ராஜாவுக்கும், அவனுக்கு கீழ் இருப்பவர்களுக்கும் எப்படி உடன்படிக்கை இருக்குமோ, அப்படியாக, சாபங்கள் மற்றும் ஆசீர்வாதங்களின் பட்டியலும் கொடுக்கப்பட்டிருந்தது.

பத்துக் கட்டளைகளில் இன்னொரு விஷயம் என்னவென்றால், அது உறவு முறையைக் குறித்தது. முதல் 4 கட்டளைகள் தேவனோடு இருக்கக் கூடிய உறவு முறையை பற்றியது. மற்றும் கடைசி 6 கட்டளைகள் ஒருவரோடு ஒருவருக்குள்ள உறவுமுறையைக் குறிக்கின்றது. அது தான் நீதி என்பது. அது மதத்தைப் பற்றியது அல்ல. ஆனால் நாம் எப்படி தேவனையும் மற்றவர்களையும் நடத்துகிறோம் என்பதை பற்றியது. இந்த சுயநீதியான உலகத்தில், பக்தியுடன் வாழ்வது சுலபம். ஆனால் நாம் தேவனையும் மற்றவர்களையும் எப்படி அன்புச் செய்கிறோம் என்பது நம் இருதயங்களை வெளிப்படுத்தும். அன்பு (உறவுமுறை) என்பது கிறிஸ்துவத்தின் வேராக இருக்கின்றது. தேவனை முழு இருதயத்தோடும், மனதோடும், ஆத்துமாவோடும் மற்றும் முழு பலத்தோடும் அன்பு செய்வது மற்றும் நம்மைப்போல பிறரை நேசிப்பது, தேவனையும் மற்றவர்களையும் அன்பு செய்வது கிறிஸ்துவுக்கு நாம் கீழ்படிவதன் சாட்சியாக இருக்கின்றது.

வசனம் 18–20 வரை, மக்கள் எப்படி பதிலளித்தார்கள் என்று பார்க்கிறோம். அவர் பயத்துடனும், நடுக்கத்துடனும் இருந்தார்கள். இது அவர்களுடைய நிதானம், உடைந்த மனம் மற்றும் தாழ்மையின் அறிகுறி.

இதைத்தான் தேவன் நம்மில் எதிர்ப்பார்க்கிறார். நம் நொறுங்கிய இருதயங்கள், சங் 51:16–17, ஏசாயா 66:2, ஏசா 57:15 மற்றும் பிலி 2: 12ல் பாருங்கள். தாழ்மை என்பது நம்முடைய பாவத்தன்மையை உணர்ந்து, ஒப்புக்கொண்டு தேவனுடைய பரிசுத்தத்தை பார்ப்பதாகும்.

இந்த இரு பெரும் பாடங்களைத் தான், நம் குறுகிய வாழ்நாட்களில் நாம் உணர்ந்துக்கொள்ள வேண்டும்! தேவன் யார் ? மற்றும் நான் யார் ? தேவன் யாரோ, அவரை அவராகவும், நாம் உண்மையில் யாரோ நம்மை நாமாகவும் பார்ப்பது!

அதனால் தான் ஏசா 6:1–7ல், ஏசாயா தேவனுடைய மகத்துவத்தையும், பரிசுத்தத்தையும் பார்க்கும்போது, அவனால் தன்னுடைய பாவத்தன்மையை பார்க்க முடிகின்றது.

நாம் தேவனுக்கு பயப்படும்போது, நாம் ஞானியாக இருக்க ஆரம்பிக்கிறோம் என்பதை நாம் நினைவில் கொள்ளலாம். மதிகெட்டவன் தேவனுக்கு பயப்படுவதில்லை ( சங் 14:1 ). நாம் தேவனுக்கு பயப்படுவதால் ஞானியாக ஆகிறோம். ஏனென்றால் அவர் பெரியவர் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்!



<u>செயல்முறை</u> : சங்கீதம் 51 மூலமாக ஜெபியுங்கள்.

"பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள், நடுக்கத்துடனே களிகூருங்கள்" (சங்கீதம்2 : 11)

## இதர பிரமாணங்கள் (யாத். 21) நாள்:16

பத்து கட்டளைகள் புரிந்துக் கொள்ளக்கூடியவை : மிகவும் எளிமையானவை ஆனால் நம்முடைய பாவசுபாவம் சற்று சிக்கலானது. ஆதியிலிருந்தே பாவம் நம்முடைய வாழ்க்கையை சிக்கலாக்குகிறது. தேவன் இந்த உலகத்தை மிக எளிமையாக படைத்தார். ஆனால் பாவம் தோன்றின நாளிலிருந்து எல்லாமே மாறிக் கொண்டேயிருக்கிறது.

அதிகாரம் 21–ல் இதர பிரமாணங்கள் (கட்டளைகள்) கொடுக்கப்பட்டு இருக்கிறது. இவை "சமூகப் பிரமாணங்கள்." தேவனுடைய பரிசுத்தமே இவற்றின் மூலகாரணம். அவருடைய பரிசுத்தம் மனிதரிடத்திலிருந்து நீதியையும், நியாயத்தையும் எதிர்பார்க்கிறது.

இதில் உள்ள நிறைய கட்டளைகள் அந்த காலகட்டத்தில் நிலவிய கலாச்சாரத்திற்கு ஏற்றவாறு உள்ளது. இப்பொழுதோ, இவைகள் நமக்கு அர்த்தமற்றதாகவும், மேலும் கொடுமையானதாகவும் தோன்றும்.

ஏனென்றால் நாம் வித்தியாசமான இந்த காலகட்டத்தில் வாழ்கிறோம். ஆனால் அவர்களுடைய பழமையான கலாச்சாரத்தை தெரிந்து கொண்டால் இந்த பிரமாணங்களை நாம் புரிந்து கொள் முடியும்.

இந்த பிராமணங்களிலிருந்து நாம் சிலவிஷயங்களைக் கற்றுக் கொள்ளலாம்.

* இந்த பிராமாணங்கள் மனித வாழ்க்கையை பாதுகாக்கக் கொடுக்கப்பட்டவை. உதாரணமாக வசனம் 4–ல் அடிமையானவன் ஏழு ஆண்டுகளுக்கு பிறகு விடுதலை பெற்று போகக் கடவன் என்று தேவன் சொலகிறார், ஆனால் அவன் மனைவி மற்றும் பிள்ளைகள் எஜமானுக்கே சொந்தம். ஏன் தேவன் இப்படி செய்தார் என்று நினைக்கிறீர்கள் ? நாம் இப்போது அதை யோசித்தால் கொடுமையாகத் தோன்றும். ஆனால் தேவன் அப்படி செய்ய காரணம் என்னவென்றால், அந்த காலத்தில் அடிமைகள் எல்லாவிதத்திலும் நிராகரிக்கப்பட்டவர்கள். சாதாரண உணவு கிடைப்பது கூட சவாலான விஷயம். ஆனால் எஜமானிடத்தில் அடிமையின் குடும்பம் இருந்தால், அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்ய உதவியாய் இருக்கும்.
* கண்ணுக்கு கண் : பல்லுக்குப் பல்: கைக்கு .......கை இவை பயமுறுத்துவதாக இருக்கிறதல்லவா ? ஆனால் மனிதர்கள் தவறு செய்தலின் விளைவை தெரிந்து கொள்ள வேண்டுமென்று தேவன் இதை சொல்லியிருக்கிறார். மனிதர்கள் தவறு செய்யாமல் இருக்க, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்தப் பிரமாணங்கள் உள்ளன.

தண்டனை என்னவென்று தெரிந்தால் நீங்கள் மற்றவரை காயப்படுத்த மாட்டீர்கள்!

* இந்த பிரமாணங்கள், தேவனுடைய இருதயத்தை காண்பிக்கிறது: எந்த அளவுக்கு தேவன் பாவத்தை வெறுக்கிறார்: ஆனால் பாவிகளை நேசிக்கிறார்: மேலும் தேவனுடைய கிருபையையும் அவருடைய நீதியையும் காண்பிக்கிறது.

செயல்முறை : ஆவிக்குரிய வாழ்க்கையில் எவை நமக்கு ஆத்மிக எல்லைகளாக இருக்கிறது ? ( உதாரணமாக TV, பணம், குழந்தைகள்..........)

“தேவனுடைய அன்பிலே உங்களைக்காத்துக்கொண்டு, நித்தியஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக்காத்திருங்கள் ” ( யூதா 21 )

## இதர பிரமாணங்கள் ( தொடர்ச்சி ) (யாத்22:23) நாள் : 17

அயலானிடத்தில் அன்பு கூறுவதைப் பற்றி சொல்லுவதே இந்த சில பிரமாணங்களின் பின்னனி “அவன் என்னை நோக்கி முறையிடும் போது, நான் அவனுக்கு செவிகொடுப்பேன். நான் இரக்கமுள்ளவராயிருக்கிறேன்” (அதிகா. 22:27)

ஒவ்வொரு இஸ்ரவேலனும் தன்னுடைய அயலானை நடத்தும் விதத்தில் தேவஅன்பை தன் வாழ்க்கையில் பிரதிபலிக்கிறான்.

உதாரணமாக 22:27 பிறனுடைய வஸ்திரத்தை ஈடாக வாங்கினால், பொழுது போகுமுன்னே அவனுக்குத் திரும்ப கொடுக்கவேண்டும். இஸ்ரவேலர் மற்றவரிடத்தில் அக்கறை உள்ளவராக இருக்கவேண்டும் என்பதை தேவன் போதிக்கிறார். நம்மைவிட மற்றவரை மேன்மைப்படுத்த வேண்டும் என்பதற்காகத் தான் இதை சொல்கிறார்.

நாம் இந்த பிரமாணங்களுக்காக தேவனை துதிக்க வேண்டும். இவை நமக்கு எப்படி தேவனையும் ஒருவருக்கொருவரையும் அன்பு செய்வது என்று கற்றுத் தருகிறது.

“ உம்முடைய வார்த்தைகள் என்நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள்” என்று சங்கீதக்காரன் சங்கீதம் 119: 103–ல் சொல்கிறான்.

தேவன் தொடர்ந்து இஸ்ரவேலருக்கு பிரமாணங்களைக் கொடுக்கிறார் நியாயப் பிரமாணங்கள். தேவன் நியாயமானவர். எல்லோரும் அப்படியே இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். நியாயப் பிரமாணத்தை புறக்கணிக்கும் போது தேவ கோபாக்கினைக்கு ஆளாகிறோம்.

அதிகாரம் 23: 10–13 ஓய்வு நாளுக்கான பிரமாணத்தை தேவன் வெளிப்படுத்துகிறார். வசனம் 14–19 வரை இஸ்ரவேலர் ஆசாரிக்க வேண்டிய பண்டிகைகளை குறிப்பிடுகிறது. முக்கியமான மூன்று பண்டிகைகளில் இஸ்ரவேலர் ஒன்று கூடி ஆசாரிப்பர்.



தேவன், அவருடைய மக்கள் ஒன்று கூடி கொண்டாடவும், அவருடைய ஆசீர்வாதங்களில் களிகூரவும் விரும்புகிறார். இது இஸ்ரவேலருக்குள் நிறைய ஒற்றுமையை கொண்டுவந்தது.

அவர்கள் ஒருமனப்பட்டு விசுவாசத்தோடு தேவனை தொழுது கொண்டார்கள். வருடங்கள் கழிந்தபின்பு அவர்கள் ஆலயத்தை எழுப்பினபோது அதையும் சேர்த்து கொண்டாடினார்கள்.

இந்தப் பண்டிகைகளின் கொண்டாட்டம் மூலமாக தேவனுடைய வல்லமையையும், எவ்வாறு அவர் எகிப்திலிருந்து இஸ்ரவேலரை மீட்டு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இடத்திற்கு கொண்டு வந்தார் என்பதையும் நினைவுகூர்ந்தார்கள்.

செயல்முறை : எகிப்திலிருந்த நாட்களையும் (ஞானஸ்னானத்திற்கு முன்பு ) தேவனுடைய வல்லமையினால் கிடைத்த இரட்சிப்பையும் நினைவு கூர்ந்து ஜெபம் செய்வோம்.

“கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது.” (ரோமர்1 : 16)

## உடன்படிக்கையை உறுதிசெய்தல் (யாத்.24) நாள் : 18

யாத்திராகமம் புத்தகத்தில் அதிகாரம் 24–ல் உச்சகட்ட நிகழ்ச்சி ஒன்று நடந்தது. ஆபிரகாமின் பிள்ளைகள் ஒரு தேசமளவிற்கு பலுகிப் பெருகி இருந்தார்கள். அவர்கள் தேவனோடே கூட ஒரு உடன்படிக்கையை உறுதி செய்ய வேண்டியதாயிருந்தது. அந்த தேசம் தேவனால் ஆளப்படவேண்டியது. இந்த உடன்படிக்கையின் உறுதிமூலமாக இஸ்ரவேல் தேவனுடைய அற்புத பொக்கிஷமாக, பரிசுத்த தேசமாக, ஆனது.

மோசே இந்த உடன்படிக்கைக்கு மத்தியஸ்தர் (24:2). மத்தியஸ்தர் என்பவர் நடுவில் இருப்பவர். அதாவது, மோசே தேவனிடத்தில் இஸ்ரவேல் மனிதராகவும், இஸ்ரவேலுக்கோ தேவனுடைய மனிதராகவும் திகழ்ந்தார். புதிய ஏற்பாட்டில் இயேசு, தேவனுக்கும் மக்களுக்கும் நடுவில் மத்தியஸ்தராக இருந்தார். கிறிஸ்து, நமக்கு தேவமனிதனாகவும், தேவனுக்கு மக்களை இரட்சிப்பவராகவும் இருந்தார்.

இந்த உடன்படிக்கையானது (அ.24–வ.3–ல்) “கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம்” என்று ஜனங்கள் பிரதியுத்தரமாக சொன்னதினால் உறுதியாயிற்று. அவர்கள் தேவனே கர்த்தராகிய கடவுள் என்று தங்களை அர்ப்பணித்தார்கள். அதைத்தான் நாமும் ஞானஸ்நானத்தின் போது செய்தோம். தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்படிவோம் என்று இதே வார்த்தையை தான் நாமும் பிரதியுத்தமாக சொல்லி, கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுத்தோம். இயேசுவே ஆண்டவர் என்பதும் இரட்சகர் என்பதும் ஒன்றுடன் ஒன்று இணைந்த விஷயம்.

தம்மை ஆண்டவர் என்று ஏற்றுக் கொள்ளாதவரை கிறிஸ்துவால் இரட்சிக்க முடியாது.

இயேசு உங்கள் வாழ்க்கையில் ஆண்டவரா ? எல்லா காரியங்களிலும் இது மிக முக்கியமான விஷயம். ஏனென்றால் இயேசுவினிடத்தில் நம்மை முழுவதும் அர்ப்பணிக்காவிட்டால் நாம் இரட்சிக்கப்பட முடியாது. (லூக்கா 14:25-33) இயேசுவின் சீஷராக இருப்பது என்பது இதுதான்.

நம்முடைய உறவுகள் குடும்பம், உடல்நிலை, பணம், வேலை, இப்படி எல்லாவற்றிலேயும் "நம்மை நாமே வெறுத்து, சிலுவையை சுமந்து கொண்டு, தேவனை அனுதினமும் பின்பற்றக் கடவோம்."

வசனத்தில் சொன்னதுபோல், "தேவன் பெருமை கொள்கிறவர்களை எதிர்க்கிறார். ஆனால் தாழ்மையானவர்கள் மீதோ இரக்கமாயிருக்கிறார்." தாழ்மையானவர்களே தேவனிடத்திலிருந்து அதிக இரக்கத்தைப் பெறுகின்றனர். நம்மை நாம் அர்ப்பணிக்கும் போது, ஒப்புக் கொடுக்கும் போது, தேவகிருபையை பெற கடவுள் நமக்கு உதவிசெய்வார். கிறிஸ்துவின் இரத்தம் மூலமாக தேவன் ஒரு புதிய உடன்படிக்கையை உருவாக்குகிறார். (மத்தேயு 26:28) நாமும் இஸ்ரவேலரைப் போல பிரதியுத்தரமாக "கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின் படியும் செய்வோம்" என்போம்.

<u>செயல்முறை :</u> உங்கள் வாழ்க்கையில் எந்தெந்த விஷயங்கள் இயேசுவின் இரத்தத்தினால் புதுப்பிக்கப்படவேண்டும் ? உங்களுடைய முடிவுகளை ஜெபத்தில் தேவனிடத்தில் ஒப்புக் கொள்ளுங்கள்.

"அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" (யோவான் 1 : 7)

## உடன்படிக்கையின் பேழை ( யாத்.25 ) நாள் : 19

<u>உடன்படிக்கைப் பெட்டி</u> ஆலயத்தில் மிகவும் புனிதமான சிறுபகுதியில் அந்த வலிமையான பெட்டி மிகவும் முக்கியமான பொருளாகும். (யாத் 25:10-22) சாட்சிப் பெட்டிஎன்றும், (யாத்25:22) தேவனின் உடன்படிக்கைப் பெட்டி என்றும் அழைத்தார்கள். அந்த பெட்டி தேவனின் எல்லா வாக்குறுதிகளையும் நிறைவு செய்ததின் ஞாபகமாக ஒப்புவிக்கப்பட்டதாக விளங்கியது. பத்துக் கட்டளைகள் யாவும் அடங்கியிருந்த இரண்டு கல் வெட்டுப் பலகைகள் அந்த பெட்டியில் வைக்கப்பட்டிருந்தது. அந்த பெட்டிக்குள் மன்னாவைக்கப்பட்டிருந்த பொற்பாத்திரமும் ஆரோனின் தளிர்த்த கோலும் கூட அடங்கி இருந்தது. (எபி 9: 4-5)

<u>பொற் பெட்டியின்</u> மேல் கிருபாசனத்தை ஏற்றி வைக்கவேண்டும். பெட்டியின் மூடி இரண்டு கேரூபின்கள் ஒன்றுக்கொன்று எதிர் முகமுள்ளவைகளாய் மூடியின் மேல் இருக்க வேண்டும். இரண்டு கேரூபின்களுக்கிடையில் கிருபாசனம் உள்ள இடத்தில்தான் தேவன் தம்முடைய மக்களை சந்திக்கும் இடமாக இருக்கிறது.



அந்த ஒப்புரவாகுதலின் நாளில் அங்கே தலைமை ஆசாரியர் இரத்தத்தை மூடியின் மேல் தெளிப்பார். பின்பாக அந்த இரத்தம் இஸ்ரவேலரின் பாவங்களுக்கு ஒப்புரவாக்குதலை உண்டாக்கும்.


<u>திரைச் சீலையானது,</u> மிகவும் பரிசுத்தமான இடம், பரிசுத்தமான இடம் என தனித்தனியாக பிரிக்கிறதினால், தேவ பிரசன்னத்திற்குள்ளாக செல்லும் வழி இன்னும் திறக்கப்படவில்லை என்று பொருளாகும். இது ஏனென்றால் பாவங்கள் மனிதனை தேவனிடமிருந்து பிரிக்கின்றது. ஆண்டுக்கு ஒரு முறை பிரதான ஆசாரியர் தன்னுடைய சொந்தபாவங்களுக்காக பலி செலுத்தினப்பின்பு திரைச்சீலையைக் கடந்து செல்லமுடியும். சிலுவையில் இயேசுவினுடைய தியாகத்தினால் மிகவும் பரிசுத்தமான இடத்திற்கு செல்லும் வழி திறந்தது. சிலுவையில் அறையப்பட்டப் போதுதான் அந்த திரைச்சீலை கிழிந்தது. (மத்தேயு27:51) ஆகையால் நாம் நம்பிக்கையோடு கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம். இதன்படி நாம் இரக்கத்தை பெறும்படிக்கு நமக்கு உதவ ஏற்ற சமயத்தில் கிருபையை கண்டடைவோம்.

<u>மேஜையில்</u> பன்னிரெண்டுக் கோத்திரங்களைக் குறிக்கும் பன்னிரெண்டு அப்பங்கள் வைக்கப்பட்டிருந்தது. அவர்களுடைய ஆன்மீக உணவுக்கு தேவன் தாமே மூலகாரணம் என்பதை இந்த அப்பம் குறிக்கின்றது. இந்த அப்பமானது தேவ சமூகத்திற்கு முன்பாக வைக்கப்பட்டதினால் பிரசன்னத்தின் அப்பம் என்றும் கூட அழைக்கப்பட்டது. மேலும் அந்த மேஜையின் மேல் பொற்தட்டுகளையும் (ஒரு வேளை அப்பத்துண்டுகளை எடுத்து செல்வதற்காக) கரண்டிகளையும், ஜாடிகளையும், பானம் குடிக்கக்கொடுக்க கிண்ணங்கள் வைக்கப்படவேண்டும். ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாக இருக்கிறவன் ஒருகாலும் தாகமடையான் என்று இயேசு அறிவிக்கின்றார். அவர் ஒருவரே நம்மை ஆன்மீகத்தில் நிலைத்திருக்கச் செய்கின்றார்.


<u>விளக்கு தண்டில்</u> ஏழு விளக்குகள் (குத்து விளக்கு) இருந்தது. மேலும் பரிசுத்த ஸ்தலத்தில் வெளிச்சம் கிடைக்க ஒரே ஆதாரமான விளக்கு பத்தாகும். (யாத் 25: 31-40) காலை வேளையிலிருந்து மாலை வேளைவரைக்கும் ஆசாரியர்கள் ஊழியம் செய்வதற்காக விளக்கு தொடர்ந்து எரிந்து கொண்டே இருக்கும். (யாத்27:20-21) இன்று இயேசு உலகத்திற்கு ஒளியாகவும் இருக்கின்றார் (யோவான் 8:12) தேவனிடம் செல்வதற்கு வழியை வெளிப்படுத்தும் வெளிச்சத்திற்கு ஒரே ஆதாரமாக இருக்கிறார். (யோவான் 14 : 6-9) ஒரு வேளை விளக்குத் தண்டை (இயேசுவை) எடுத்தோமென்றால் நாம் இருளில் இருக்கவேண்டியிருக்கும்.

<u>செயல்முறை :</u> உங்களுடைய வாழ்க்கையில் மற்றவர்கள் கிறிஸ்துவை எந்த வகையில் பார்க்கின்றார்கள் ?

"இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது." (மத் 5:16)





வாசஸ்தலம்




பலிபீடம்







தொட்டி



மேஜை



விளக்குதண்டு




தூபவர்க்கம்





உடன்படிக்கைப் பெட்டி



உடன்படிக்கைப் பெட்டி

தம்முடைய மக்களுக்குள்ளே வாசமாக இருந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. (யோவான் 1:14) இந்த வாசஸ்தலம் அனேக பெயர்களால் குறிக்கப்பட்டுள்ளது. (யாத் 25:9) சரணாலயம், பரிசுத்தமான இடம் என பொருள். (யாத்25:8). கூடாரம் (யாத் 26: 7:11:14,36) ஏனென்றால் இதன் வடிவம் கூடாரம் போன்றது. ஆசாரிப்புக் கூடாரம் (யாத் 27:21) இதனுடைய உத்தேசமான வடிவத்தை வெளிப்படுத்துகிறது. சாட்சியின் வாசஸ்தலம் (யாத்38:21 : அப்போ 7:44) எனவும் சாட்சியின் கூடாரம் (எண்ணா 9:15) என்றும் பொருள் கொள்ளும் இடங்களில் தான் இரண்டு பிரமாணப்பலகைகள் வைக்கப்பட்டிருந்தன. (அதாவது பெட்டிக்குள் மிகவும் பரிசுத்தமான இடத்தில்)

அந்த வாசஸ்தலம் பெரிய கூடாரமாக நீண்ட சதுரமான, வாலிபால் விளையாடும் மைதானத்தைப் போல 21/2 மடங்கு கொண்டதாகவும் வெளிப்புறமனைவேலியுடன் கூடியதாகவும் இருந்தது. அது தூக்கிச் செல்லக்கூடியது. அந்த மனையின் சுவர்களும், கூடாரமும் திரைச்சீலைகளால் உண்டாக்கப்பட்டவைகள். அந்த வாசஸ்தலம் தேவன் ஸ்தாபரிக்கின்ற பரிசுத்தமான ஆலயமாக இருந்தது. மேலும் பரிசுத்தமான வெளியரங்கமும், மிகவும் பரிசுத்தமான உள்ளரங்கமும் கொண்டதாக இருந்தது.

வனாந்தரமாக இருந்த காலத்தில் தேவனுடைய பிரசன்னத்தை வாசஸ்தலத்தின் மேலாக எப்பொழுதும் மந்தாரமாகவும், அக்கினி சுவாலையின் அடையாளமாகக் காணலாம். கட்டி முடிக்கப்பட்ட வாசஸ்தலமானது எப்பொழுதும் கூடாரத்துக்கு மத்தியிலே இருந்தது. எல்லாப் பக்கத்திலும் மக்கள் சூழ்ந்திருந்தார்கள். தம்முடைய மக்கள் மத்தியில் ஸ்தாபரிப்பதையே தேவன் தேர்ந்தேடுத்தார். நம்முடைய வாழ்க்கைக்கு தேவனே மையமாக இருக்க வேண்டும். இஸ்ரவேல் மக்கள் இன்னமும் தேவைக்குள்ளாக இருப்பதாக காணப்படவில்லை. இருந்தும் தேவன் தேவைகளை சந்திக்கத் தொடங்கினார். அவரை வழிபடும் கூடாரம் அவருடைய வாசஸ்தலமாக இருந்தது. அந்த இடம் மட்டுமே இஸ்ரவேல் மக்கள் தேவனை நெருங்கும் இடமாக மாறியது. (பிற்பாடு எருசலெமில் கட்டப்பட்டிருந்த ஆலயத்தில் மாற்றப்பட்டது).

ஒரு பலி பீடத்தை உண்டு பண்ணி எரியுண்ட காணிக்கையை வெண்கலத்தட்டால் மூடிவைக்கும் படி தேவன் ஒரு திட்டத்தை கொடுத்தார். மேலும் வாசஸ்தலத்திற்கான பிரகாரத்தை உண்டுபண்ணும்படியும் ஒரு திட்டத்தை அளித்தார். (யாத் 27 :1–16) அந்த பிரகாரத்திற்குள் நுழைய ஒரே ஒரு வழிதான் (கதவு, நுழைவாயில்) இருந்தது. அந்த வழியாகத்தான் ஒரு நபர் தேவனுடைய பிரசன்னத்திற்கு செல்லமுடியும். அங்கு பலிபீடம் வைக்கப் பட்டிருந்தது. அதன் மேல் தான் அனுதினமும் குறிக்கப்பட்டக்காணிக்கைகள் வைக்கப்படவேண்டும். தேவனுடைய பிரசன்னத்தை அடைய பலி அவசியம் என்பதை இது காட்டுகின்றது. இதைத் தான் இயேசுகிறிஸ்து செய்தார். தேவனுடனான உறவு கொள்வதற்காக இயேசு கிறிஸ்து பலியானார்.



லேவியராகமம் 17:11 வசனத்தின் படி ஒருவருடைய வாழ்க்கைக்கு இந்த இரத்தமானது ஈடு செய்யக்கூடியதாக இருக்கிறது. பலி செலுத்தி ஈடு செய்யும் வாசலை சென்றடையாமல் ஒருவராலும் தேவனுடைய பிரசன்னத்தின் அனுகூலத்தைப் பெற அவரை நெருங்க முடியாது. நானே வாசல் என இயேசு சொன்னார். என்வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான். (யோவான் 10:9) மேலும் இயேசு நானே வழி என்று சொன்னார். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோவான்14:6)

செயல்முறை : யோவான் 14:6 வசனத்தை மனப்பாடம் செய்யுங்கள்

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்." (யோவான்14:6)

## ஆசாரியருக்குரிய வஸ்திரங்கள் (யாத்.28) நாள் :21

ஆசாரியர்கள் என்னத்தை உடுக்கவேண்டும், யார் அவைகளை தயாரிக்கவேண்டும், அவர்கள் அவைகளை ஏன் உடுக்க வேண்டும் போன்றவைகளை இந்த அத்தியாயம் விளக்குகின்றது. (யாத் 28:2–4) இந்த வஸ்திரங்கள் எவ்வாறு கொடுக்கப்படவேண்டும் என்கின்ற விபரங்கள் (யாத் 28: 16–43) உள்ளன.

இப்படிப்பட்ட உடைகளோடு அவர்கள் எவ்வாறு காணப்படுவார்கள் என்பதை கற்பனை செய்து பாருங்கள். அற்புதம் என்னவென்றால் அவர்கள் தேவ ஊழியத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களானதால், மற்ற மக்களைவிட அவர்கள் மிகவும் வித்தியாசமாக காணப்படுவார்கள். இந்த ஆடைகள் யாவும் என்னத்தினாலானவைகள்?

1) கோமேதக கற்கள் : (யாத் 28: 9–12) இஸ்ரவேல் புத்திரர்களின் அடையாளத்திற்காக இந்த கற்கள் அணியப்பட்டன.

2) மார்ப்பதக்கம் : (யாத் 28: 15–30) ஆரோன் கர்த்தருடைய சந்நிதானத்தில் பிரவேசிக்கும் போது அவைகள் அவன் இருதயத்தின் மேல் இருக்கவேண்டும், தன் இருதயத்தின் மேல் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதானத்தில் எப்பொழுதும் தரித்துக் கொள்ளவேண்டும் என தேவன் விரும்பினார்.

3) மற்ற ஆசாரிய வஸ்திரங்கள்: (வ.31–43)

* அங்கி மக்களை வழிநடத்தும் போது ஆரோன் அணிந்து கொள்ளும் அலங்கார அங்கி (வ.31–35)
* பரிசுத்த பொன்னினாலான பட்டம்: பரிசுத்தமானவைகளை படைக்கும் போது அவைகளின் தோஷத்தை ஆரோன் சுமக்கும்படி ஆரோன் நெற்றியில் அணிவது.(வ.38)
* உள்சட்டை – தலைப்பாகை : அந்தஸ்த்தையும், கௌரவத்தையும் அளிக்கூடியவைகளான உள்சட்டையும், தலைப்பாகையும்.(வ.40)

* சணல் நூல் சல்லடங்கள் : தோஷமும், மரணமும் நேரிடாதபடிக்கு அணியக்கூடிய இவையனைத்தும் மற்ற வகை வஸ்திரங்கள்.(வ.43)

இவையனைத்தும் ஆசாரியர்கள் தேவனுக்காக மக்களை வழிநடத்தும் போது அணியக்கூடியவைகள். நாம் என்னத்தை அணிவோம், எதனால் உடுத்து விப்போம்.

* ஆகையால் நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தரும், பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் நாம் தரித்துக் கொள்ள வேண்டும்.
* துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை ஆடையாக தரித்துக் கொள்வோம். (ரோமன் 13:14)

செயல்முறை : கொலோசேயர் 3:12 வசனத்தின்படி நம்மேல் என்னத்தினால் உடுத்தியிருக்க காணப்படவேண்டும் ?

“ஆகையால் நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரத்தத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு....” (கொலோசெயர் 3:12)

## ஆசாரியர்களை பரிசுத்தப்படுத்துதல் (யாத்: 29) நாள் : 22

தேவ ஊழியத்திற்கு பரிசுத்தப்படுத்தப்படுவது என்றால் நீங்கள் தேவனுடைய சித்தத்தின் படி செய்ய முழுமையாக ஒப்பிவிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று அர்த்தம். ஆரோனும் அவனுடைய பிள்ளைகளையும் பொறுத்தமட்டில் அவர்கள் தங்களை முழுமையாக ஒப்புக்கொடுத்து இஸ்ரவேல் தேசத்து மக்களின் சார்பாக தொடர்ச்சியான சமாதான பலிகளை செலுத்திவந்தார்கள். இயேசுகிறிஸ்துவை கர்த்தராகவும், இரட்சகராகவும் ஏற்றுக் கொண் மக்களாகிய நாமும் கூட பரிசுத்தமாக்கப்பட்டு தேவனின் சித்தத்தின்படி நற்காரியங்களையும், நிறைவான காரியங்களையும் கற்றுக்கொள்ளவும், செய்யவும் செல்லக்கடவோம்.

யாத்திராகமம் 29: 1–9 வரை நம்முடைய பரிசுத்த தேவனோடு பொருந்தியுள்ள புனிதமான குணுதிசயங்களைப் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. தேவ பரிபூரணத்திற்காகவும், பங்குக்காகவும், சுத்தத்திற்கும், முழுக்குதலுக்கும் கடினமாக பிரயாசப்படுவதற்காக ஆசாரியர்கள் அழைக்கப்பட்டார்கள்.

* நாம் நிறைவுள்ளவர்களாக இருக்க பிரயாசப்படுவதற்கு முயலுகிறோமா ? இயேசுகிறிஸ்துவுக்கு நம்மை முழுமையாக ஒப்புக் கொடுத்தும், தேவனுடைய வார்த்தைக்கு நம் வாழ்க்கையில் கீழ்ப்படிவதுமே நிறைவுள்ளவர்களாவதற்கு நாம் செய்யும் ஒரே வழி. ஆட்டுக்காவும், காளையும் பழுதற்றதாக இருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். (யாத்29:1)



* நாம் தேவனுக்காகவும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்காகவும் பிரித்தெடுக்கப்பட்டவர்களாக அழைக்கப்பட்டிருக்கிறோம். அவரால் நாம் பிரித்தெடுக்கப்பட்டு அவருக்காகவே நாம் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றோம். அப்பமும், அடைகளும் புளிப்பில்லாமாலிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். (யாத் 29:2)
* நாம் நம்மை தேவனுக்கு முன்பாக வரையறைக்கப்படாதவர்களாகவும், சுத்தமாகவும் சமர்ப்பிக்க வேண்டும். ஆரோனும், அவனுடைய மகன்களும் தண்ணீரினால் கழுவப்படவேண்டும் என தேவன் விரும்பினார் (யாத்29:4)
* நாம் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறோமா ? பிரதான ஆசாரியர்கள் அபிஷேக எண்ணெயினால் அபிஷேகம் பண்ணப்பட வேண்டும் என தேவன் விரும்பினார். (யாத் 29:7)

ஆரோனும் அவனுடைய குமாரர்களும் முன்வந்து அவர்களுடைய பாவங்களுக்காக பலி செலுத்தப்பட்டதையும், அவர்களுடைய பாவங்கள் பலியாட்டுக் கடாவுக்குள் சென்றது என்பதையும் காணலாம் (யாத் 29: 10–18). மனிதனுடைய பாவங்கள் அனைத்தும் முழுமை இல்லாத பலியான விலங்குக்குள் சென்றடைந்தாலும், முழுமையான பலியைக் காணும் வரை இதை செலுத்த வேண்டியது அவசியம் என்பதை நாம் தெளிவாக புரிந்து கொள்கின்றோம்.

நாம் பாவமில்லாமல் தேவனுக்கு முன்பாக வருவதற்கும், நம்முடைய பாவங்களை சுத்தமாக்கவும் இயேசுகிறிஸ்து நிறைவான பலியாக கொடுக்கப்பட்டார். (எபிரேயர் 10: 9–12) நம்முடைய பாவங்களுக்கு தண்டிக்கப்பட வேண்டிய நம்மை அதிலிருந்து காப்பாற்றிய இயேசுகிறிஸ்துவுக்கு நாம் எவ்வாறு நன்றி உள்ளவர்களாக இருக்கின்றோம் ?

ஆரோனும், இயேசுகிறிஸ்துவும் தெய்வீகத்திற்கு அழைக்கப்பட்டு தரமான மனிதத்தன்மையோடு ஆசாரியத்துவ தகுதிகளை பகிர்ந்து கொண்டார்கள். எப்படியானாலும் ஆரோனைப் போலல்லாமல் இயேசுகிறிஸ்து பலி செலுத்த அவசியமில்லாதிருந்தது. அதுபோன்ற ஒரே நிறைவான பிரதான ஆசாரியர் பலி கொடுக்க முன்வந்தது முழுமையான, முடிவற்ற பயனளிக்கிறதாக இருந்தது. (எபிரேயர் 5: 1–8, 9: 11–14)

செயல்முறை: இயேசுகிறிஸ்துவின் ஆசாரிய ஊழியத்திற்காக தேவனை நாம் போற்றுவோமாக.

“வசனங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப் போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம். ” (எபிரேயர் 4:14)

## இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவம்

இயேசு கிறிஸ்து செய்து கொண்டிருந்த ஊழியங்களில், ஆசாரியராக அவருடைய ஊழியம் மிகவும் முக்கியமானது.

ஆசாரியராகிய இயேசு கிறிஸ்து பற்றிய ஒரு பாடம் நமக்கு இருக்கிறது.

எபிரேயர் 2:17 : நிறைவான அதேபோல தெய்வீகமான இயேசு கிறிஸ்து உண்மையான மத்தியஸ்தராகவும், பிரதான ஆசாரியராகவும் இருக்கிறார் என இந்த வசனம் காண்பிக்கிறது.

எபிரேயர் 4:14 – 16 : நிறைவான பிரதான ஆசாரியர் மனிதன் தேவனுடைய குரலை கேட்கச்செய்யவும், மனிதர்களை தேவ சமூகத்திற்கு முன்பாக கொண்டுவருவதே கிறிஸ்துவின் வேலையாக இருக்கிறது. மனிதர்களோடு கூட பரலோகத்தில் இயேசு கிறிஸ்து தம்மை எவ்வாறு அடையாளம் காட்டுகிறார் என்பதை இந்த வசனங்கள் காண்பிக்கின்றது. எல்லா மனிதர்களைப் போலவே இயேசுவும் தூண்டப்படுதலையும், வேதனையையும் எதிர் கொண்டவராக இருந்தும் பாவமில்லாதவராக இருந்தார். இதன் மூலமாக நமக்கு உதவி செய்யவும், கிருபை அளிக்கும் வல்லமை கொண்டவராக இயேசு இருக்கிறார்.

எபிரேயர் 5:1 – 10 : தெய்வீகப்பூர்வமான நியமனம்.
தேவ காரியங்களை நடப்பிப்பதற்காக மனிதர்களுக்கு மேலாக நியமிக்கப்பட்டவர்தான் ஆசாரியராக இருக்கிறார். ஆசாரியரானவர் மனிதர்களுள் மேலாகவும் அவர்களை கண்ணியமாக நடத்துபவராகவும் இருக்க வேண்டும். இயேசு உறுதியானவராகவும், பொறுமையுள்ளவராகவும் இருக்கின்றார். இப்படியாகத்தான் இயேசு நமக்கிருக்கின்றார். இயேசு நம்மை புரிந்து கொள்ளக்கூடியவராகவும் தேவனுக்குப் பின்பாக நம்மை கண்ணியமாக வழி நடத்துபவராகவும் இருக்கிறார்.

எபிரேயர் 6:19 – 20 : நிலையான ஆசாரியர்.
ஆலயங்களில் மேலான ஆசாரத்திற்குரிய இடங்கள் எல்லாம் தூய்மையும், புனிதமானதாகும். இது எப்போதும் மூடப்பட்டிருக்கும். இந்த இடம்தான் தேவன் தோற்றமளிக்கிறவராக இருந்தது. இந்த மாதிரியான இடத்திற்கு பிரதான ஆசாரியராக இருக்கிற ஒரு மனிதன் மாத்திரமே உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவார். இப்போது எல்லா மனிதர்களும் தேவனுக்கு நெருக்கமாக செல்லும்படியாக இயேசுவின் மூலமாக தேவனை நெருங்க முடியாதவர்கள் கூட நெருங்கி செல்கிறார்கள்.

எபிரேயர் 7:22 – 28 : நம் தேவைகளை சந்திக்கின்ற பிரதான ஆசாரியர்.
நாம் பெற்றிருக்கும் மேலான உடன்படிக்கைக்கு இயேசு கிறிஸ்து உத்திரவாதம் கொடுக்கின்றவர். இயேசு நமக்காக வாழ்ந்து, நம்மை முற்றிலுமாக காப்பாற்றுகிறவராகவும், நமக்காக பரிந்து பேசக்கூடியவராகவும் இருக்கிறார். இயேசு நாமெல்லாருக்கும் ஊழியக்காரராகவும், உண்மையிலேயே அவர் ஊழியருக்கெல்லாம் ஊழியக்காரராக இருக்கின்றார்.

எபிரேயர் 8:1 – 6 : மேன்மை பொருந்திய பிரதான ஆசாரியர்.
மேலே ஏறினவரும், மேன்மை பொருந்தியவருமான இயேசுகிறிஸ்துவுக்கு மேலான மகிமை எதுவும் இல்லை. அவரே மாட்சிமை பொருந்திய தேவனின் சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறவர். என்றாலும் இயேசு தொடர்ந்து பணிவிடை செய்கிறவராக இருக்கின்றார். அவர் ஒரு ஒப்பற்ற



கூட்டாகிய மாட்சிமை பொருந்தியவரும், (கடமை) பக்தி நிறைந்தவராகவும் இருக்கின்றார்.

## தேவனை வழிபடுவதில் தேவனுடைய எதிர்பார்ப்புகள்(யாத்.30)

நாள் : 23

அதிகாரம் 30 தேவனை வழிபடுவதில் தேவனுடைய எதிர்பார்ப்புகளை சொல்கிறது.

தூபங்காட்டும் பொற்கலசம் ( வசனம் 1- 10 ) பரிசுத்த இடத்திற்கும் மிகுந்த பரிசுத்த இடத்திற்கும் இடையில் இருந்தது. ஆசாரியர் ஒவ்வொரு நாளும் காலையிலும், மாலையிலும் தூபவர்க்கம் செலுத்துவார். இந்த பொற்கலசம் தின வழிப்பாட்டையும், ஜெபத்தையும் காட்டுகிறது. (வெளி 8: 3–4) ஆசாரியன் முன்பாக, இந்த இடத்தில் தான் பாவங்களுக்கு பலி செலுத்தப்பட்டது.

பாவநிவர்த்தி பணம், ஒவ்வொரு இஸ்ரவேலனும் பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படி, அரைச் சேக்கல் கொடுக்க வேண்டும். ஐசுவரியவான் அரைச்சேக்கலுக்கு அதிகமாய் கொடுக்க தேவையில்லை. தரித்திரன் அதற்கு குறைவாக கொடுக்கவும் தேவையில்லை. இது, எல்லா ஆத்துமாவும் தேவனுக்கு முன்பாக சமம் என்பதையும், நம்முடைய வெளிப்புறச் செயல் ஆத்துமாவை பாதிக்கும் என்பதையும் காண்பிக்கிறது. எல்லாரும் பாவம் செய்துள்ளனர், ஒரே விலையில் மீட்கப்பட வேண்டும்.

இந்த நிவர்த்தியானது, தேவனிடமிருந்து எந்த ஆத்துமாவின் மேலும் எந்த நோயையும், சாபத்தையும் கொண்டு வரவைக்காமல் இருப்பதற்கு ஆத்தும விடுதலை என்பது – பாவநிவர்த்தி செலுத்தின பின்பு தேவனுடைய கண்மையில் அவனுடைய விசுவாசம் விளங்கப்படுகிறது. தேவன் அவனை மீட்டு, தன்னுடைய உடன்படிக்கைக்கு கொண்டுவருகிறார். இந்த நிவர்த்தியானது தன்னுடைய மீட்புக்காக அவன் செலுத்தக் கூடிய விலையாக இருக்கிறது. நாம் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டோம். நம்முடைய ஆத்துமாவுக்கு விலையை தேவன் கொடுத்திருக்கிறார்.

வெண்கலத் தொட்டி யாத்தி 30: 17–21 அது பெரிய தொட்டி பலீபீடத்தின் வெளியில் வைக்கப்பட்டு, அது பரிசுத்த ஆசாரியர்கள் தங்களை பரிசுத்தப்படுத்தி, பலீபீட கூடாரத்தில் செல்வதற்கு வைக்கப்பட்டது. பரிசுத்த கழுவுதலை அதுகுறிக்கிறது. விசுவாசிகளாகிய நாமும் இயேசுவின் இரத்தத்தினால் ஞானஸ்நானம் மூலமாக கழுவப்பட்டு, தேவ உறவுக்குள் நுழைந்தோம். பரிசுத்தத்திற்கு நாம் தேவனை நோக்கி தினமும் திரும்பவேண்டும். நம் பாவத்தை அறிக்கையிட்டால் தேவன் நம்மை எல்லா அநீதியினின்றும் காத்து மன்னிப்பார். (1 யோவான் 1:9)

தேவன், தம்மை வழிபடும்போது, எந்த அளவு மனிதன் பரிசுத்தத்தோடு வழிபடவேண்டும் என்பதில் மிகுந்த கவனத்தோடு இருக்கிறார் என்பதை காணகிறோம். இஸ்ரவேல் ஜனங்களை காயத்திலிருந்து மீட்க இந்த

வழிமுறைகளைக் கையாண்டார். அவரே மக்களை இரட்சிக்கிறார், அவருடைய வழியில், அவருடைய முறையில்.

செயல்முறை :பாவமன்னிப்பு கடிதம் தேவனுக்கு எழுதி, ஜெபியுங்கள். இயேசுவின் இரத்தம் நம்மை எல்லா பாவங்களிலிருந்தும் பரிசுத்தப்படுத்தும்.

"இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள் அப்படியே ஆகும், ஆமென்" (யோவான்1:7)

## வேலை மற்றும் ஓய்வு ( யாத். 31 ) நாள் : 24

வேலை தேவன் ஒரு நோக்கத்திற்காக நம்மை படைத்தார். எப்படி பெசலெயேலையும், அகோலியாபையும் வெள்ளி, வெண்கல விநோதமான வேலைகளை செய்ய திறமை கொடுத்தாரோ அதுபோல உடன்படிக்கை பெட்டிசெய்யவும், சகலபணிமுட்டுகளை செய்யவும் தேவன் அவர்களுக்கு திறமை கொடுத்தார்.

ஆசாரியர்களின் ஆராதனை வஸ்திரங்களை செய்யவும் அவர்கள் அறிந்திருந்தனர். அவர்களுக்கு மட்டுமல்ல, அவர்களின் கீழ் வேலை செய்த மனிதருக்கும் தேவன் திறமை கொடுத்திருந்தார். பெசலெயேலும், அகோலியாவும் தலைவர்களாக வழி நடத்தினார்கள்.

அதைப்போலவே, தேவ ராஜ்ஜியம் கட்ட, தேவன் நம் திறமைகளை பயன்படுத்துகிறார். பரிசுத்த ஆவியின் வரங்கள், தீர்க்கதரிசனம், ஊழியம், உபதேசம், தேற்றுதல், காணிக்கை, தலைவர், இரக்கம்காட்டுதல் (ரோமர்12:6–8) நமக்கும் வரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. தேவனுடைய ராஜ்யத்தை உருவாக்க அவைகளை நாம் உபயோகிக்க வேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார்.

ஓய்வு நாளை உபசரித்தலில், தேவன் உறுதியாக இருக்கிறார்.

* வேலை, தேவனுடைய நோக்கத்தை தொலைக்கிறது. நம் திறமைகளுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நம் வேலைகளுக்கு நாம் பாராட்டப்பட்டு நாம் மகிமைப்படுகிறோம்.
* ஓய்வு, நாம் தேவனை நோக்க உதவுகிறது. ஓய்வு தேவனுக்காக காத்திருத்தல். தேவனோடு நேரம் செலவழித்தல், தேவனுடன் பேசுதல் விசுவாசத்தை அதிகப்படுத்துதல்.

கடினமான இந்த உலகில், ஓய்வானது தேவனோடு இருக்கவேண்டும்.

யாத் 31:17 தேவன், ஓய்வெடுப்பதைப் பற்றி குறிக்கிறார். தேவன் அதை செய்யும் போது நமக்கு என்ன எது உண்மையான ஓய்வு ? வேலையிலிருந்து ஓய்வு. நல்லது செய்வதிலிருந்து அல்ல. தேவன் நல்லது செய்வதை நிறுத்துவதில்லை. ஓய்வு நாளில் இயேசு ஜனங்களை குணப்படுத்தினார்.



செயல்முறை: தேவன் நமக்கு என்ன திறமைகள், வரங்கள் கொடுத்திருக்கிறார்? அவர் கிருபையின்படி, வித்தியாசமான வரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. நம் விசுவாசத்திற்கு அவற்றை உபயோகப்படுத்துகிறோம்.

"நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக் கேற்றதாகச் சொல்லக்கடவன். ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன் பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன். முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்" ரோமர் (12: 6–8)

## பொன்னாலான கன்றுக்குட்டி (யாத்.32) நாள் : 25

உன்னதமான, பரிசுத்த வெளிப்படுதலுக்கு மத்தியிலும், வெளிப்படையான தேவமகிமைக்கு மத்தியிலும், ஒரு அசம்பாவிதமான நிகழ்ச்சி, உருவவழிபாடு என்ற பெயரில் நடந்தது.

இஸ்ரவேலர் தேவமகிமைக்கு பதிலாக ஒரு பொன்னாலான கன்றுக்குட்டியை வழிப்பட்டனர். தங்களை இரட்சித்த தேவனை மறந்தனர். மகத்துவமான அற்புதங்களை செய்த தேவனை மறந்தனர்.

இதை படிக்கும் போது அதிர்ச்சியாக இருக்கிறதல்லவா? எப்பேர்ப்பட்ட பரிசுத்தத்திற்கு மத்தியில் இப்படிப்பட்ட காரியம் நடந்தது? எப்படி நன்றியுணர்ச்சி சிலை வழிபாடாக மாறியது? அவர்கள் எகிப்திலிருந்து வெளியேறின போதிலும், எகிப்து அவர்களை விட்டு வெளியேறவில்லை. நம்மில் ஒருவரும் எகிப்துக்கு தூரமானவரல்லவே. இதுவே மனித இருதயத்தின் உண்மை.

தேவனுடைய ராஜ்யத்தில் ஒரு பகுதியாய்/அங்கமாக இருக்க, நாம் உலகத்தைவிட்டு வந்திருந்தாலும், உலகம் தொடர்ந்து நம்மை கவர்ச்சியூட்டக் கூடியதாகவும், சோதனைக்குட்படுவதுமாய் இருக்கிறது. இன்று உங்கள் இருதயம் எங்கே இருக்கிறது? எந்த வழிகளில் உலகம் நம்மில் ஒரு பகுதியாய் இருக்கிறது? விதைக்கிறவனைப் பற்றிய உவமையில், இயேசு, இந்த உலகக் கவலையிலும், ஐசுவர்யத்தின் மயக்கத்தினாலும் நெருக்கிப் போடப்படுகிற விதைகளைப் பற்றி பேசுகிறார்.

இது களையெடுக்கும் நேரம். இல்லையென்றால், அவை நம்மை ஆத்மீகமாக நெருக்கிவிடும்.

இந்த அத்தியாயத்தின் இரண்டாவது பகுதி மோசேயின் மத்தியஸ்த வேலையை உணர்த்துகிறது. எப்படி தன்னுடைய ஜனங்களுக்காக மனிதன் தேவனிடத்தில் மத்தியஸ்தராக போராடுகிறான் என்கிற அற்புதமான ஆன்மீக உண்மையை காண்கிறோம். மோசே மக்களுக்காக மன்றாடுகிறார். வசனம்13–ல் தேவன் அருளின வாக்குத்தத்தத்தை நினைவு கூர்ந்து கெஞ்சிப் பிரார்த்தித்தான்.

வேதாகமம் "தேவன் பரிதாபங் கொண்டார்" என்றுரைக்கிறது. இது தேவனுடைய மென்மையான இருதயத்தை காண்பிக்கிறது. அவருடைய உண்மையான அன்பும், பரிதபிக்கக்கூடிய சாந்த குணமும் தெரிகிறது. வேதம் முழுவதிலும், தேவன் எப்போதும் மன்னிக்க விருப்பமாயிருக்கிறார் என்பதை காண்கிறோம்.

ஆனால் பாவத்தின் பலன் எப்போதும் உண்டு. தேவன் குற்ற உணர்ச்சியை அகற்ற தயாராக உள்ளார். ஆனால் பாவத்தின் பலன் கண்டிப்பாய் உண்டு. இந்த மக்கள் தங்களுடைய முட்டாள் தனமான, பிடிவாதமான காரியங்களை செய்வதற்கு பலனை சந்திக்க வேண்டியதாயிற்று. பாவம், அந்த அளவிற்கு ஆபத்தானது. அது அழித்துவிடும். சூழ்ந்த விளைவுகளை ஏற்படுத்தும். பாவத்தில் எந்த ஞானமும் இல்லை. ஆனால் தேவனுடைய கிருபையோ அற்புதமான வரம். இலவசமாக கிடைக்கக் கூடியது. ஆனால் மலிவானது அல்ல.

செயல்முறை : எந்தெந்த சிலைவழிப்பாட்டிற்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கிறோம்? அதை எப்படி அப்புறப்படுத்துவது என்பதற்கு வழி யோசியுங்கள். நம்முடைய வாழ்க்கையில் தேவனே பிரதானமாயிருக்க வேண்டும்.

"மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும் மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் வேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது." (எபேசியர் 5: 3–5)

## மற்றுமொரு வாய்ப்பு (யாத்.33,34) நாள்: 26

இஸ்ரவேலரின் சிலைவழிப்பாட்டை எதிர்க்கும்விதமாக, இஸ்ரவேலரின் பிரயாணத்தில் அவர்களோட கூட இருக்கமாட்டேன் என்று மோசேவினிடத்தில் தேவன் சொல்கிறார். அவருக்கு பதிலாக ஒரு தேவதூதனை அவர்களுக்கு முன்பாக அனுப்புகிறார். தேவன் இஸ்ரவேலரை " பிடரியில் கடினப்பட்ட ஜனங்கள் " என்று அழைக்கிறார்.

பாவத்தினால் வரும் மகிழ்ச்சி சிலகாலம் தான்: ஆனால் நீண்டகாலப் பலன்கள்? இஸ்ரவேலர் தங்களுடைய பாவம் எவ்வளவு பெரியது என்று யோசிக்கவில்லை (அதி 32:31) தேவன் மிகவும் கண்டிப்பானவராக இருந்தார். தேவன் பாவிகளை நேசித்தாலும் எந்த அளவிற்கு பாவத்தை வெறுக்கிறார் என்பதை இங்கு பார்க்கிறோம்.

மோசே தேவனிடத்தில் மிக அன்னியோன்யமான உறவு கொண்டிருந்தார். அதிகாரம் 33: 11–ல் தேவன் மோசேவோடு முகமுகமாய்ப் பேசினார் என்று வாசிக்கிறோம். இது தேவனுக்கும் மோசேவுக்குமான நேரடியான தொடர்பை வெளிப்படுத்துகிறது. முழு பழைய ஏற்பாட்டிலும், இது மோசேவை ஒரு தனித்துவமான இடத்தில் வைக்கிறது.

ஆனாலும் அப்படிப்பட்ட தலைவருக்கும் புதுப்பித்தல் அவசியம். மோசே கூட இனி தன்னால் தொடர்ந்து செல்ல இயலாது என்ற நிலையை அடைந்தார் (வசனம் 12–16). தன் பலத்தை இழந்தவராக அவர் உணர்ந்திருக்கலாம், அல்லது அவருக்கும் ஒரு புதிய வெளிப்படுத்துதல் தேவைப்பட்டிருக்கலாம். மோசே தேவனுடைய



வழிகளை அறியவும், அவருடைய மகிமையை காணவும் (33:13) வேண்டினார். தேவன் அவருடைய வேண்டுதலை நிறைவேற்றினார்.

நம்முடைய ஆத்மீக வாழ்க்கையில் நாம் எல்லோரும் நிறைய மேடு பள்ளங்களை சந்திக்கிறோம். ஒரு சில வேளைகளில் நம்மால் எதையும் செய்யமுடியும் என்று உணர்கிறோம். அதேபோல் ஒருசில நேரத்தில் நம்மால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாததுபோலவும் உணர்கிறோம். ஆனால் அது போன்ற நேரங்களில் தான் தேவனிடத்தில் அதிக நெருக்கமாக செல்ல வேண்டும். அந்த கெத்சமனே தோட்டங்கள்! இந்த வேளையில் தான் விட்டுக் கொடுக்காமல் போராடி கஷ்டப்பட்டு ஜெயிக்கவேண்டும். வேதத்திலுள்ள ஒவ்வொரு அற்புத மனிதர்களும் இது போன்ற நேரங்களை கடந்து வந்தவர்கள் தான். இது போன்ற தருணங்கள் நம்முடைய குணாதியசத்தை வெளிப்படுத்துகின்றன.

மோசே புதுப்பிக்கப்பட்டவரானார். ஒரு பெரிய வீழ்ச்சிக்குப் பின் திரும்பவுமாக எழுந்து நின்று இரண்டாவது கற்பலகைகளில் தேவ வார்த்தையை வாங்கிக் கொள்ள தயாராக நிற்கிறார். (அதிகாரம் 34)

நாம் எல்லோருமே வாக்குத்தத்தம் செய்யப்பட்ட அந்த இடத்திற்கு செல்ல பிரயாணத்தை ஆரம்பித்தோம். அந்த பிரயாணத்தில் நிறைய பிரச்சனைகள் வரும். நிறைய தவறுகள் செய்யலாம். தவறான வாய்ப்பை தேர்தெடுக்கலாம். ஆனால் முடிவுதான் மிக முக்கியம். நாம் அந்த வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இடத்தை சென்றடைவோமா? ஆம் இதுவரை நம்மை அழைத்துவந்த தேவகிருபை கண்டிப்பாக நம்மை கடைசிவரை அழைத்துச் செல்லும்.!

செயல்முறை : வெவ்வேறு காலகட்டங்களில் உங்கள் வாழ்க்கையில் தேவன் கொண்ட கிருபையை நினைவுகூர்ந்து அவரை துதிப்போம்.

"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு." (எபேசியர் 2:8)

## தேவனுடைய வேலை ஆரம்பம் (யாத்.35,36) நாள்: 27

தேவன் மக்கள் மனமுவந்து கொடுக்க அழைக்கிறார். (வசனம்5–9) ஜனங்களும் இருதயத்தில் எழுப்பப்பட்டவர்களாகி, தாராளமாக, மனப்பூர்வமாக காணிக்கையைக் கொண்டுவந்தார்கள். உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் அன்பாயிருக்கிறார். ( I கொரியந்தியர் 9:7) வாசஸ்தலத்திற்கு தேவையான எல்லாவற்றையும் ஜனங்கள் கொடுத்தார்கள்.

பொன் முதல் வெண்கலம் வரை, இளநீலநூல் முதல் இரத்தம்பாரநூல் வரை, ஆட்டுக்கடாதோல், தகசுத்தோல் முதல் எல்லாவிதமான விலங்குகளையும் விலையேறப்பெற்ற கற்களையும் கொண்டுவந்தனர். ஏற்கனவே போதும் என்கிற அளவிற்கு அவர்கள் கொடுத்தமையால், இனிமேலும் கொண்டுவர வேண்டாம் என்று சொல்லும் நிலை வந்தது. கொடுக்காமல் இருப்பது அவர்களுக்கு கடினமாக இருந்தது. உங்களால் அதை கற்பனை செய்ய முடிகிறதா?

பெண்கள் உட்பட ஜனங்கள் எல்லோரும் வேலை செய்ய விருப்பமாயிருந்தார்கள். எங்கு அழைப்பு வந்தாலும் அங்கு சென்று பணிசெய்ய தயாராகயிருந்தார்கள். திறமையுள்ளவர்கள் மனமுவந்து வேலை செய்ய அழைக்கப்பட்டார்கள்.

மனமுவந்து செய்வது என்பது இருதயம் சம்பந்தப்பட்ட விஷயம். இன்று மனமுவந்து கொடுக்கும் விஷயத்தில் நம்முடைய இருதயம் எப்படி இருக்கிறது?

வேதாகமத்தில் படிப்பதன் மூலமாக மட்டும் அந்த வாசஸ்தலத்தின் உண்மையான அழகை நம்மால் கற்பனை செய்ய முடியாது. அதை நம் கண்களால் காணவேண்டும். அது தேவன் வாசம் செய்யும் இடம்.

தேவனுடைய வாசஸ்தலம் எனபதால் அற்புதமான, தலைசிறந்த பொருட்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. சிறந்த பொன், சிறந்த வெண்கலம், சிறந்த தோல், சிறந்த மரம், சிறந்த வெள்ளி.

தேவனே இயக்குநர். ஒவ்வொரு விஷயமும் அதிக அக்கறையோடு செய்யப்பட்டது. தேவன் கட்டளையிட்டவிதமாகவே (அதிகாரம் 39: 1,7,21,31) ஜனங்கள் எல்லாவற்றையும் செய்து முடித்தார்கள். தேவனே பிரதான கட்டமைப்பாளர். சிறந்த சிருஷ்டிகர். அதிக புதுமை செய்பவர்.

இதுபோலவே ஒரு அற்புதமான அழகான இடத்தை பரலோகத்தில் நமக்காக தயார் செய்கிறார். யோவான் 14: 3,4–ல் இயேசு நமக்காக அந்த இடத்தை ஆயத்தம் செய்ய சென்றிருக்கிறார் என்று வேதாகமம் சொல்கிறது.

அந்த இடம் எப்படி இருக்கும்? வெளிப்படுத்துதல் 21–ல். மணவாளனுக்காய் அழகாக அலங்காரம் செய்து காத்திருக்கும் மணவாட்டியை போல இருக்கும் என்று வேதம் சொல்கிறது. திரும்பவுமாக தேவன் நம்மோடு வசிக்கப் போகிறார். அங்கே கண்ணீரில்லை, மரணமில்லை, வலியில்லை, எப்படிபட்ட அற்புதமான இடம் அது என்று நம்மால் கற்பனை செய்யகூட முடியாது.

"தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை."

<u>செயல்முறை :</u> எந்த விஷயங்களில் நாம் கொடுப்பதில் முன்னேற வேண்டும்? (உங்களுடைய கணவனுக்கு / மனைவிக்கு, குழந்தைகளுக்கு, குடும்ப சபையில், வேலையில், காணிக்கையில்............)

"இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகள் நினைக்கவும் வேண்டுமென்று எல்லாவிதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றான" (அப்போஸ்தலர் 20:35)



## பலிபீடம் கட்டுதல் ( யாத்.37 ) நாள் : 28

தேவன், மோசேயிடம் சில முக்கியமான பணிமுட்டுகளை பீடத்தில் வைக்கச் சொல்லி, கூறியிருந்ததைப் பற்றி யோசிப்போம். மலையில் தனக்கு காட்டப்பட்ட அதே முறையில் தான், பீடம் கட்டப்படவேண்டும் என்பதில் உறுதியாயிருந்தார். எபிரேயர் புத்தகம் எழுதியவர் கூறுகிறார், இவர்கள் செய்யும் ஆராதனை வரப்போகிறவைகளின் சாயலுக்கும், நிழலுக்கும் ஒப்பாயிருக்கும் என்று.

பலிபீடம் என்பது, தேவன் பூமியில் வாழும் இடமாக இஸ்ரவேலரால் கருதப்பட்டது. இது நடந்தது கி.பி 1446ல். சாலமோன் அந்த பலிபீடம் இருந்த இடத்தில்தான் ஆலயம் கட்டினார். 480 ஆண்டுகளுக்கு பிறகு அதாவது 966–ல் ( 1 இராஜா 6:1 ) பிறகு இயேசு தாமே ஆலயமாக கட்டினார். (யோவான் 2:19) பரிபூரணமெல்லாம் சரீர பூர்வமாக அவருள் வாசமாயிருக்கிறது.

<u>உடன்படிக்கைப்பெட்டி</u> ( வ. 1–9 ) பொன்னாலபெட்டி, பின்வரும் பொருட்களால் நிறைந்தது. ( எபி 9:4 / உபாக 10:15 )

1. மன்னா
2. ஆரோனுடைய தடி
3. கற்பலகைகள்

தேவன் கொடுக்கிறவர் என்பதை நினைவுப்படுத்தவும், அவர் பரிசுத்தமானவர் என்றும், தேவனுக்கும் அவனுக்கும் இடையே ஒரு மத்தியஸ்தராக அந்த கட்டளைகள் கொடுக்கப்பட்டது.

–உடன்படிக்கை பெட்டி தொலைந்து போனது, (எரேமியா 3:16) அதைப்பற்றி வெளி 11:19ல் கூறப்பட்டுள்ளது.

<u>மேஜை/அப்பங்கள்</u> ( 10–16 ) ஒவ்வொரு ஓய்வுநாளிலும், 12 அப்பங்கள் மேஜையின் மேல் வைக்கப்படும். புதிய ஏற்பாட்டில், இயேசு நிஜ அப்பமாக பரலோகத்திலிருந்து வந்தார். (யோவான் 6:48)

<u>விளக்குத் தண்டு</u> (வ. 17–24) வாதுமைக் கொட்டைப்போல உருவாக்கப்பட்டது. ஆசாரியருக்கு ஒளிகொடுக்கும் விளக்காக இருந்தது. பின்பு தேவனுடைய வார்த்தையாக மாற்றப்பட்டது. ( சங்கீ 119:105 ) இயேசு உலகிற்கு ஒளியாக இருக்கிறார் (யோவான் 8:12)

<u>தூபவர்க்கம்</u> (வ. 25–29) பீடம் முன்பாக வைக்கப்பட்டது (யாத்தி 40:5) தூபங்கள், பரிசுத்தமக்களின் ஜெபங்களாக மாற்றப்பட்டது. (எபி 13:5, வெளி 8:3)

ஒருவார்த்தையில் இந்த பணிமுட்டுகளையெல்லாம் இயேசு மாற்றியதை கவனியுங்கள்.

<u>செயல்முறை</u> : பரிசுத்தர்களுக்காக ஜெபியுங்கள் ( சபை/குடும்பசபை)

"எந்தச் சமயத்திலும் சகல விதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்." (எபேசியர் 6:18)

## பலிபீடத்தை கட்டுதல் ( தொடர்ச்சி ) யாத். 38 நாள்: 29

இந்த அதிகாரத்தில் நாம் 2 விஷயங்களை காண்கிறோம்.
நம் பாவங்களால் தேவனை அணுகமுடியாமலிருப்பது, மற்றும் நம் செயல்களினால் அவரை அணுகக்கூடிய தகுதியை பெறமுடியாமல் இருப்பது.

தேவனுக்கு முன்பாக தகுதியற்ற நிலைமை : பரிசுத்த இடத்திற்கு வெளியே இரண்டு பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன. அவை வெண்கலத்தால் செய்யப்பட்டவை. அவை தங்கத்தினால் செய்யப்பட்ட பரிசுத்த பொருட்களுக்கு மாற்றாக இருந்தன. இது நம் தேவபக்தியில்லாமலிருப்பதையும், தேவனை அணுக முடியாத தன்மையையும் காட்டுகிறது.

* தகன பலிபீடம் : இது பரிசுத்த இடத்திற்கு வெளியே அமைக்கப்பட்டது. இந்த பீடம் தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கும்படி தேவன் கட்டளையிட்டார். (லேவி 6 : 12 – 13 ) எல்லா பலிகளும் இந்த பீடத்தின் மேல் செலுத்தப்பட்டது. நம் பாவங்களுக்கு இயேசுவே பலியானார்.
* கழுவும் தொட்டி : தேவனுடைய பீடத்திற்கு செல்லும் முன்பு ஆசாரியர்களின் பாதங்கள் கழுவப்பட (யாத்தி 30 : 19 – 20 ) அமைக்கப்பட்டது. தேவன் பரிசுத்தமானவர் அவரிடம் செல்ல நாம் பரிசுத்தப்படவேண்டும். தேவன் முன்பாகவே, பின் வரும் நபர் தேசத்தை சுத்திகரிப்பார் என்பதை உணர்த்துகிறார். (சகரி 13 : 1) இயேசு ஊற்றாக அழைக்கப்படுகிறார். புதிய ஏற்பாட்டில், அது தண்ணீரால் கொடுக்கும் ஞானஸ்நானமாகிறது. சபையை பொறுத்தவரை, தேவனுடைய வார்த்தையினால் அது பரிசுத்தப்படுகிறது. (எபேசி 5 : 26 )

நம் செயல்களினால் நாம் தகுதி பெறுவதில்லை. பெலெயேலின் தலைமையில், அநேக மக்கள் பீடத்திற்கான பணிமுட்டுகள் செய்ய பங்கு பெற்றிருந்தனர். அந்த காலத்தில் தங்கள் அழகை காண வெண்கல முலாம் பூசப்பட்ட தகடுகளை கண்ணாடிகளாக உபயோகித்தனர். தொட்டி அந்த தகடுகளினால் உருவாக்கப்பட்டது. பரிசுத்த பொருட்களை செய்வதினால் நாம் பரிசுத்தமாக முடியாது. ஒரு வேளை உடன்படிக்கை பெட்டி செய்த பெசலெயேல் ஆனாலும், முழு காரியத்தில் ஈடுபட்டிருந்த இதோமாரின் குமாரனாகிய ஆரோன் ஆனாலும், பொற்கல வேலைகள் செய்யும் ஒகலியாமாக ஆனாலும் அதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

தேவன் சொன்ன எல்லாவற்றையும் அவர்கள் செய்திருந்தாலும், அவர்கள் ஒருவரும் வாக்குக்கொடுக்கப்பட்ட நிலத்திற்கு செல்லவில்லை என்பதை நாம் மறக்கக்கூடாது. விசுவாசமும் கீழ்ப்படிதலும் மட்டுமே அங்கு செல்ல உதவும். நாமும் பீடத்தை எட்டுகிறோம் (தேவ ஆலயம்) நம் செயல்களில் நாம் நம்பிக்கை வைக்கக்கூடாது. விசுவாசத்தில் இருக்க வேண்டும். அதுதான் நம்மை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இடத்திற்கு கொண்டு செல்லும். அதற்கான எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும். கீழ்ப்படியாத இஸ்ரவேலரை நாம் பின்பற்றக்கூடாது. (எபி 4 : 11)

செயல்முறை : நாம் தேவனுடன் நடக்க எவைகள் தடுக்கின்றன.

"மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மை சூழ்ந்து கொண்டிருக்க பாரமான யாவற்றையும், நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளி விட்டு நமக்கு நியமித்த ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்." (எபிரேயர் 12:1)

## ஆசாரியரின் பரிசுத்த வஸ்திரங்கள் (யாத். 39) நாள் :30

இந்த அதிகாரத்தில் ஆசாரியரின் பரிசுத்த வஸ்திரங்கள் பற்றி (வ.1–31) காண்போம். அதன் நோக்கத்தையும் மோசேயின் தன்மையையும் காண்போம். (வ.32–43) இந்த பரிசுத்த வஸ்திரங்களின் நோக்கமானது, எபேத், மார்ப்பதக்கம், ஊரிம், தும்மிம், மற்றும் கர்த்தருக்கு பரிசுத்தம் என்ற எழுத்துக்கள் எல்லாமே, பின்வரும் காரியங்களை கொண்டது.

1. தேவன் பரிசுத்தர் என்றும் அவரை அணுக நமக்கு மத்தியஸ்தர் தேவை என்பதை இஸ்ரவேலர் அறியவேண்டும்.
2. தேவனுடைய சித்தம் அறியப்படவேண்டும். மற்றும் அவர் பதிலளிக்க சித்தமாயிருக்கிறார்.
3. அவருக்கு ஊழியம் செய்ய சில விசேஷமானவர்களை தேர்ந்தெடுத்திருக்கிறார். ( லேவியர்கள் )

தேவனை விசாரித்தல் : (வ. 1–41) ஏபோத் என்பது பொன்னால் செய்யப்பட்ட ஆசாரியர் அணியக்கூடிய வஸ்திரம். ( 1 சாமு 2:18 ) சில வேளைகளில் இராஜாக்களும் அணிவர். (2சாமு 6:14) மார்பதக்கம் என்பதிலே ஊரிம், தும்பீம் என்பதை வைத்து அணிவர். (நியாயாதிபதிகள் 17:5, 18:14–20 அணியும் ஏபோதோடு குழப்பிக்கொள்ள வேண்டாம்.)

ஊரீம் முலமாக தேவனுடைய சித்தத்தை அறிவர். ஊரிம் என்றால் இல்லை என்று அர்த்தம். அதை அறியக்கூடிய உரிமை, ஆசாரியருக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது. ( உபாகமம் 33:8) தேவனுடைய திட்டத்தை அறிய அவர் வழிக்காட்டினார். ஆனால் தோல்வி எப்போதும் சரி செய்யமுடியாத அழிவில் முடிந்தது.

உதாரணம், எந்த முடிவு எடுப்பதற்கு முன்பு, மோசேயும், யோசாவும் தேவனிடத்தில் விசாரிக்க வேண்டுமென தேவன் கட்டளையிட்டார். (உண் 27: 18–21) ஏசென்னுடைய விஷயத்தில் யோசுவா, இப்படி செய்தார். ( யோசுவா 7:18) கிபியோனியர் விஷயத்தில் இப்படி செய்தபோது வலி இருந்தது. (யோசுவா 9: 14)

ஆகவே நம் வாழ்க்கையில் எந்த முடிவு எடுக்கும் முன்பு, வசனங்கள் மூலம் தேவனை விசாரிக்க வேண்டும், இது நம்மை அநேக பிரச்சனைகளிலிருந்து விடுவிக்கும். ஏனெனில் தேவன் நமக்காக பதிலளிக்க காத்திருக்கிறார். அவர் நல்லவர்.

ஊழியம் செய்பவர்களை ஆசீர்வதியுங்கள் (வ. 42–43) இஸ்ரவேலர் பணிகளை முடித்தபோது, மோசே 2 காரியங்களை செய்தார். தேவசித்தத்தின் படி எல்லாம் செய்யப்பட்டதா என்பதை கவனித்து பின்பு அவர்களை ஆசீர்வதித்தார். குறிப்பாக

ஒருவர் மட்டும் உயர்த்தப்படாமல், எல்லாரையும், ஆசீர்வதித்தார். தலைவர்களாகிய நாமும் நம் கிறிஸ்தவர்கள் தேவனுக்கு ஊழியம் செய்யும் போது, அவர்களை ஆசீர்வதிக்கவேண்டும். தேவனுடைய நாமத்தில் ஆசீர்வதியுங்கள். அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவர்.

செயல்முறை : என்ன சில முக்கியமான முடிவுகள் நீங்கள் உங்கள் வாழ்க்கையில் எடுக்கவேண்டியிருக்கும் ? தேவனுடைய சித்தத்தை அறிந்தீர்களா ?

" ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து ............ காத்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள். " (எபேசியர் 5: 15-17.)

## தேவனுடைய மகிமை (யாத். 40) நாள் : 31

யாத்திராகம பயணத்தின் கடைசி நாளுக்கு வந்திருக்கிறோம். பலிபீடத்திற்கான தேவனுடைய தெளிவானதிட்டம் (வ 1-15) திட்டத்தை நிறைவேற்றுவதில் மோசேயின் கீழ்ப்படிதல் (வ. 16-33) மற்றும், தேவனுடைய மகிமை பீடத்தில் வருதல் (வ. 34-38) தேவனுடன் செல்லவும் உடன்படிக்கையின் மூன்று படிகள் :- 1. தேவனிடமிருந்து தெளிவான வழிநடத்தல். 2. பின்பற்றுபவரின் கீழ்ப்படிதல். 3. தேவனுடைய வழிநடத்துதல், ஏற்றுக் கொள்ளுதல்.

தேவனுடனான உங்கள் உறவை நினைத்துப்பாருங்கள். ஒருவர் உங்களுக்கு கற்றுக்கொடுத்ததன் விளைவாக, தேவனுடைய கட்டளையை அறிந்தீர்கள். உங்கள் மனந்திரும்புதல் மூலமாக அவருக்கு கீழ்ப்படிந்தீர்கள். அவர் உங்களை ஏற்றுக் கொண்டார். அவருடைய ஆவியின் மூலம் அவர் மகிமை உங்கள் மேல் வந்தது. இன்று வரை அந்த ஆவி உங்களை வழிநடத்துகிறது.

தேவனுடைய தெளிவான இயக்கம் : (வ. 1-15) தேவன் தாம் சொன்னதை மிக தெளிவாக கூறுகிறார் என்பதை நாம் பார்க்கிறோம். அவர் கூறுவது புரியவில்லை என்று மக்கள் சொல்வதெல்லாம் ஒரு சாக்குதான் ஆனால் கீழ்ப்படிய அல்ல. கீழ்ப்படியக்கூடிய இருதயம் நமக்கிருந்தால் அவருடைய கட்டளைகள் நமக்கு பாரமாக இருக்காது. ( I யோவான் 5:3 )

தகவல்களை விளக்கமாக கொடுப்பதற்கு நேரம் எடுத்துக்கொள்கிறார். எதை எங்கு செய்யவேண்டும் என்று மோசேயிடத்தில் விளக்குகிறார். நம் வாழ்க்கையைப்பற்றியும் அவருக்குத் தெரியும். நம் தலையில் உள்ள முடிகள் கூட எண்ணப்பட்டுள்ளது (மத்.தேயு 10:30) ஆகவே அவரோடு நாம் பேசும் போது, நம் வாழ்க்கையைப்பற்றி கூறுவோம். நம் வாழ்க்கையின் ஒவ்வொரு காரியங்கள் குறித்தும் அவர் அக்கறை உள்ளவராயிருக்கிறார்.

கீழ்ப்படிதல். (வ.16-33) தேவன் கட்டளையிட்டபடியே, மோசே எல்லாவற்றையும் செய்து முடித்தார். " தன் வீட்டிலே விசுவாசமானவன்" என்று தேவன் மோசேயை அழைக்கிறார்.



தேவனுடைய மகிமை. (வ. 34-38) தேவனுடைய மகிமை பீடத்தின் மேல் வந்தது. அந்த நாள் முதல் தேவன் நம் மக்களோடு வாசமாயிருந்தார். உங்களால் கற்பனை செய்து பார்க்கமுடிகிறதா ?

மனிதனோடு வாழ முடிவெடுத்தார். முதலில் தேவன் மனிதனோடு நடந்தார். ( ஆதி 5: 24: 6:9) பிறகு அவனோடு வாழ முடிவு எடுத்தார். ( யாத் 25:8) மற்றும் அவர் மகிமை பீடத்தின் மேல் வந்தது. அந்த ஆலயத்தில் தேவன் வாசமாயிருந்தார். (I இராஜா 8: 10-11) பிறகு தேவனுடைய மகிமையாக இயேசு வந்தார். (யோவான் 1:14) விசுவாசிகளிடத்திலும், சபையிலும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். (I கொரி 6:19) ஒருநாள் அவர் மகிமை புதுபரலோகத்தில் வெளிப்படும், நாமும் உண்மையாக அவரோடே வாசம்பண்ணுவோம். ( வெளி 21:3 )

இந்த யாத்திராகமம் வேதனையில் தொடங்கி தேவனுடைய மகிமையில் முடிகிறது. அடிமைத்தளத்திலும், வலியிலும் தொடங்கி, மகிழ்ச்சியிலும் விடுதலையிலும் முடிகிறது. நம் வாழ்க்கையில் நாம் தேவனுக்கு கீழ்ப்படிந்து, அர்ப்பணித்து வாழ்ந்தோமானால், வேதனைக்காலங்கள் வரும்போது, மகிமையான காலங்கள் வரும் என்று நினைவுப்படுத்திக் கொள்வோம்.

**" நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்." (வெளி 22:21)**

## யாத்ராகமத்தில் தெய்வீகப் பெண்மணிகள்

ஆண்கள் மற்றும் பெண்கள் என இரு பாலாரோடும் தேவன் உடன் இருந்து செயல்பட்டகாரியங்கள் நிரம்பிய ஒரு புத்தகமாக வேதாகமம் இருக்கிறது. இன்று தேவனுடைய இராஜ்ஜியத்தில் பெண்கள் தொடர்ந்து செயலாற்றுவது போலவே இஸ்ரவேல் சரித்திரகால பெண்மணிகளும் கூட, மிக முக்கியமான பங்கு வகித்திருக்கிறார்கள்.

யாத்ராகமத்தில் இடம் பெற்றுள்ள சில தெய்வீகப்பெண்கள் இன்று நமக்கு உதாரணமாக சேவை புரிந்ததை நாம் பார்க்கலாம்.

1. **எபிரேய மருத்துவச்சிகள் :** சிப்பிராள் - பூவாள் (யாத் 1: 15-21) இந்த இரண்டு பெண்மணிகளின் விசுவாசம்மற்றும் தேவ பயம் வியப்பளிக்கத்தக்கூடியதாக இருக்கிறது. பார்வோனுடைய கட்டளையாக இருந்தும் கூட, அந்த பெண்மணிகள் தேவனுக்கு பயந்தவர்களானபடியால் புத்திக் கூர்மையோடு செயல்பட்டார்கள். எபிரேய மொழியில் அவர்களுடைய பெயர்களுக்கு சௌந்தர்யம், பிரகாசம் என பொருளாகும். ஒரு வேளை ஆண்பிள்ளையாக இருந்தால் அவனை கொன்றுவிடுங்கள் என்கிற பார்வோனுடைய கட்டளைக்கு மாறாக கொல்லக்கூடாது என்கின்ற தேவனுடைய கட்டளைக்கு இந்த பெண்கணிகள் கீழ்ப்படிந்தார்கள்.
2. **யாக்கேபேத் :** ( யாத் 2 :1-4) மோசேயின் தாயாகிய யாக்கேபேத் ஒரு விசுவாசமுள்ள பெண்மணியாக இருந்தாள். மோசேயினுடைய தாய், தகப்பனைப்பற்றி எபிரேயர் 11 : 23 வசனத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது.

அந்த பெண்மணி தன் மகனை நாணற்கூடையில் வைத்து நைல் நதியில் விட்டதை பார்க்கும் போது அவள் தேவன் மேல் கொண்டிருந்த விசுவாசம் வியப்படையச்செய்கிறது. தேவன் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார் என விசுவாசித்து நம்மில் எத்தனை பேர் மூன்று மாதக்குழந்தையை நதியில் விட்டது போல செய்ய முன் வருவோம். நாம் இன்னும் குழந்தைகளுக்கு அதிகப்படியான பாதுகாப்பளித்து, சலுகைகள் கொடுத்து வளர்க்கும் காலத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். யாக்கேபேத் உண்மையிலேயே ஒரு விசுவாசத்தின் கதாநாயகியாக இருக்கிறாள்.

3. **இஸ்ரவேல் பெண்மணிகள் :** ( யாத் 3 : 22 ) அண்டை நாட்டாராகிய எகிப்தியரிடம் வெள்ளியிலான மற்றும் பொன்னிலான பொருட்களையும் மேலும் துணிமணிகளை கேட்கும் பொறுப்பை தேவன் இஸ்ரவேல் பெண்மணிகளுக்கு கொடுத்திருந்தார். கேளுங்கள் அப்பொழுது அது உங்களுக்கு கொடுக்கப்படும். தங்களுடைய அயலாரிடத்திற்கு விசுவாசத்தோடு கேட்கச் சென்ற அந்த இஸ்ரேலிய பெண்மணிகளின் செயலை கற்பனை செய்து பாருங்கள்.

4. **சிப்போராள் :** ( யாத் 4 : 24 – 26 ) மோசேயினுடைய மனைவியாகிய சிப்போராள் விருத்தசேனம் பண்ண வேண்டும் என்கிற தேவனுடைய உடன்படிக்கைக்குக் கீழ்படிந்து செயல் புரிந்தது வியப்பளிக்கும் வகையில் உள்ளது.

5. **மிரியாம் :** ( யாத் 15 : 20 – 21 ) ஆரோன் மற்றும் மோசேயினுடைய சகோதரியாகிய மிரியாம் மற்ற பெண்மணிகளை தேவனைப் புகழ்ந்தேற்ற வழிநடத்திய தீர்க்கதரிசனம் உரைக்கிற பெண்மணிகளில் முதலாவது பெண்மணியாவாள்

6. **திறமை மிக்க பெண்மணிகள் :** ( யாத் 35 : 25 – 29 ) தேவனுடைய பணியை செய்ய விசேஷ திறமை கொண்ட பெண்மணிகளும் பங்கு பெற்று இருக்கிறார்கள். ஆண்கள், பெண்கள் என்கிற வித்தியாசமில்லாமல் திறமையான கரங்களைக் கொண்டவர்களை தேவன் வரவேற்கின்றார்.

முடிவாக, தேவன் தாமே தம்முடைய இருதயத்தில் மட்டுமல்லாமல் அவருடைய இராஜ்ஜியத்திற்குள் பெண்மணிகளுக்கு மாத்திரமல்லாமல் ஆண்களுக்கும் விசேஷமாக இடம் கொடுத்திருக்கிறார்.

## கிறிஸ்தவர்களும் பழைய ஏற்பாடும்

இஸ்ரவேல் மக்கள் கைக் கொள்ள வேண்டிய அறுநூறுக்கும் அதிகமான பிரமாணங்கள் பழைய ஏற்பாட்டில் அடங்கி இருக்கிறது. இந்த பிரமாணங்களுக்கு அவர்களுடைய கீழ்ப்படிதலானது அவர்கள் தேவன்பால் கொண்டிருந்த அன்பை காட்டுகின்றது. அதிகப்படியான பிரமாணங்களை பழைய



ஏற்பாட்டில் நாம் யாத்ராகமப் புத்தகத்திலும், லேவியராகமப் புத்தகத்திலும், எண்ணாகமப் புத்தகத்திலும், உபாகமப் புத்தகத்திலும் காணலாம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் பழைய ஏற்பாட்டின் பிரமாணங்களை கைக் கொள்ளவேண்டுமா ? அனேக கிறிஸ்தவர்கள் இதைக் குறித்து குழப்பம் அடைந்திருக்கிறார்கள். இந்த கேள்விக்கு நாம் விடை காண முயற்சிப்பது மிகவும் அவசியம்.பழைய ஏற்பாடு, கிறிஸ்தவர்களாகிய நம்மோடு எவ்வாறு தொடர்புடையதாக இருக்கிறது என்பதை புரிந்து கொள்வதற்கு சில வழிமுறைகள் நமக்கு இருக்கின்றது.

1. பழைய ஏற்பாட்டு பிரமாணங்கள் ஒரு உடன்படிக்கையாக இருக்கிறது. இந்த பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையானது யாஹ்வே என்பவருக்கும் அவருடைய தேசத்திற்கும் இடையே உண்டானது. இது இஸ்ரவேல் மக்களை கட்டுப்படுத்தக்கூடிய பிரமாணமாக இருந்தது.

2. பழைய ஏற்பாடு நமக்கான ஏற்பாடு இல்லை. உடன்படிக்கை என்பதற்கு மற்றொரு சொல்தான் ஏற்பாடு என்பது. இயேசு கிறிஸ்துவினால் முன்மொழியப்பட்ட புதிய ஏற்பாடு அல்லது புதிய உடன்படிக்கைக்கு கீழ்ப்பட்டவர்களாக நாம் இருக்கின்றோம். அதாவது புதிய ஏற்பாட்டில் பழைய ஏற்பாட்டின் பிரமாணங்கள் மீண்டும் சொல்லப்படாத வரையில் பழைய ஏற்பாட்டு பிரமாணம் நம்மை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது. (ரோமர் 6:14–15)

3. சில பழைய ஏற்பாட்டு பிரமாணங்கள் புதிய ஏற்பாட்டில் மறுபடியுமாக சொல்லப்பட்டு இருக்கிறது. இஸ்ரவேல் மக்களுக்கு தொடர்புடைய பிரமாணங்கள் மற்றும் சடங்குகள் சம்மந்தமான பிரமாணங்களைப்பற்றி புதிய ஏற்பாட்டில் மறுபடியும் சொல்லப்படவில்லை. அதாவது விலங்குகளை பலியிடுவதோ, யார்மீதாவது கல்லெறிவதோ, யாரையாவது எரிக்கவோ நமக்கு கட்டளையில்லை.

4. பழைய ஏற்பாட்டின் சில பகுதி பிரமாணங்கள் புதிய ஏற்பாட்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. எல்லாவித நீதியான பிரமாணங்கள் புதுப்பிக்கப்பட்டு மறுபடியும் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கின்றது. உதாரணமாக விபச்சாரத்தில் ஈடுபடக்கூடாது. இச்சையாகவும்பார்க்கக்கூடாது (மத்தேயு 5:27–28) கொலைச் செய்யக்கூடாது, கோபம் கொள்ளக்கூடாது மத்தேயு(5: 21–23) புதிய ஏற்பாட்டிலும் இந்தப் பிரமாணம் விவரிக்கப்பட்டு இருக்கிறது.

5. அனைத்து பழைய ஏற்பாட்டு பிரமாணங்களும் தேவனால் நமக்கு நேரடியாக சொல்லப்பட்டிருந்தாலும் அவைகள் நமக்கு இன்னமும் தேவனுடைய வார்த்தைகள் தான். வேதாகமத்தில் அடங்கியிருக்கும் எல்லாவித பிரமாணங்களும் நமக்கு தனிபட்டமுறையில்

கட்டளையிடப்படவில்லை என்றாலும், முடிவாக நாம் அனைவரும் தெரிந்து கொள்ளவேண்டும் என தேவன் விரும்புகிறார்.

* பழைய ஏற்பாட்டு பிராணங்களை நமக்கு தேவன் தன் முழு சுவாசத்தால் கொடுத்த வார்த்தையாக நாம் பார்க்கவேண்டும். இதை நேரடியாக நமக்கு தேவன் கட்டளையிட்டார் என நாம் பார்க்க வேண்டும்.
* ஆதலால் இஸ்ரவேலரின் வரலாற்றுக்கும் பழைய உடன்படிக்கைக்கும் பழைய ஏற்பாட்டு பிரமாணங்கள் அடிப்படையானவைகள் என நாம் பார்க்கவேண்டும். குறிப்பாக மறுபடியும் சொல்லப்பட்டாலொழிய புதிய உடன்படிக்கையின்படி பழைய ஏற்பாட்டு பிரமாணங்கள் கிறிஸ்தவர்களை கட்டுப்படுத்துவதாக நாம் பார்க்கக்கூடாது.
* தேவனுடைய நியாயம், அன்பு மற்றும் தரமான விதிகள் பழைய ஏற்பாட்டு பிரமாணத்தில் வெளிப்படுத்தப்பட்டு இருப்பதை நாம் பார்க்கலாம். தேவனுடைய தரமான விதிகளுக்கு இணையாக அவருடைய இரக்கம் அல்லது கருணையும் இருக்கிறது என்பதை நாம் பார்க்கலாம்.
* பழைய ஏற்பாடானது தேவனால் படிப்படியாக வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டின் மூலம் தேவனுடைய வெளிப்பாடு முடிவடைகிறதாக இருக்கிறது.

## அ. பழைய ஏற்பாட்டின் பண்டிகைகள் மற்றும் புனிதமான நாட்கள்

| பெயர் | பழைய ஏற்பாட்டு வசனங்கள் | பழைய ஏற்பாடு காலங்கள் | அதற்குஒப்பான தற்போதைய காலங்கள் |
|---|---|---|---|
| 1. ஓய்வு நாள் | யாத்திராகமம் 20:8–11: 31: 12–17 லேவியாகமம் 23 : 3 உபாகமம் 5: 12–15 | 7–ம் நாள் | அதே |
| 2. ஓய்வு வருடம் | யாத்திராகமம் 23: 10–11 வேலியாகமம் 25: 1–7 | 7–ம் வருடம் | அதே |
| 3. யூபிலி வருஷம் | லேவியராகமம் 25: 8–55 27: 17–24 : எண்ணாகமம் 36:4 | 50–ம் வருடம் | அதே |
| 4. பஸ்கா | யாத்திராகமம் 12: 1–14 லேவி 23:5 எண்ணாகமம் 9: 1–14 28:16 உபாகமம் 16: 1–7 | முதலாவது மாதம் (அபீப்) –14 | மார்ச்–ஏப்ரல் |
| 5. புளிப்பில்லா அப்பப் பண்டிகை | யாத்தி 12: 15–20 : 13: 3–10: 23:15: 34:18 லேவி 23: 6–8 எண்ணா 28 : 17–25 உபாகமம் 16: 3–8 | முதல் மாதம் (அபீப்) 15–21 | மார்ச்–ஏப்ரல் |
| 6. முதற் பலன்கள் | லேவி 23 : 9–14 | முதல் மாதம் (அபீப்) 16 | மார்ச்–ஏப்ரல் |
| 7. வாரங்கள் (பெந்தகோஸ்தே) (அற்புதகால பண்டிகை) | லேவி 23: 16(அ)34:22(அ) லேவி 23: 15–21 : எண்ணாகம் 28: 26–31 உபாகமம் 16: 9–12 | மூன்றாம் மாதம் (சிவன்) –6 | மே – ஜூன் |
| 8. எக்காளம் ஊதும் நாள் | லேவி 23: 23–25 எண்ணாகமம் 29: 1–6 | ஏழாம் மாதம் (திஷ்ரி) 1 | செப்டம்பர் அக்டோபர் |
| 9. பாவநிவாரண நாள் (யோம் கிப்பூர்) | லேவி16: 23 26:32 எண்ணாகமம் 29: 7–11 | ஏழாம் மாதம் (திஷ்ரி) 10 | செப்டம்பர் அக்டோபர் |
| 10.கூடாரப் பண்டிகை (சேர்ப்புகாலப் பண்டிகை) | யாத்தி 23: 16(ஆ) 34: 22 (ஆ) லேவி 23: 33–36 (ஆ) 39–43 எண்ணாகமம் 29: 12–34 உபாகமம்16:13–15 சகாரியா 14: 16–19 | ஏழாம் மாதம் (திஷ்ா) 15–21 | செப்டம்பர் அக்டோபர் |
| 11. ஆசாரிப்பு நாள் | லேவி 23: 36(ஆ) எண் 29: 35–38 | ஏழாம் மாதம் (திஷ்ரி) 22 | செப்டம்பர் அக்டோபர் |
| 12.பூரிம் | எஸ்தர் 9: 18–32 | 12–ம் மாதம் (ஆதார்) 14, 15 | பிப்ரவரி–மார்ச் |

## ஆ. பழைய ஏற்பாட்டில் உள்ள பலிகள்

| பெயர் | பழைய ஏற்பாட்டில் வசனக்குறிப்பு | நோக்கம் | பலியிடும் பொருள்கள் |
|---|---|---|---|
| 1. தகனபலி | லேவி 1: 3–17<br>6: 8–13 | அடிப்படை மனிதனின் பாவத்திற்கு நிவாரணமாக | பழுதற்ற இளங்காளை மந்தையிலிருந்து எடுத்தது அல்லது இரண்டு பறவைகள் |
| 2. பாவ நிவாரண பலி | லேவி 4: 1–5, 13<br>6: 24–30 | ஒரு குறிப்பிட்ட பாவத்தின் நிவாரணத்திற்காக | பழுதற்ற இளங்காளை அல்லது ஆடு அல்லது 2 பறவைகள் அல்லது மெல்லியமாவு |
| 3. குற்ற நிவாரண பலி | லேவி 5: 16–6:7<br>7: 1–10 | தான் செய்த பாவத்தினால் குற்றமுள்ளவனாகி, அதன் நிவாரணத்திற்காக | --------Do-------- |
| 4. போஜன பலி | லேவி 2: 1–16<br>6: 14–23 | பாதுகாப்பான நன்மதிப்பை பெற | மெல்லிய மாவு, புளிப்பில்லா அதிரசம், புளிப்பில்லா அடை முதற்கனிகள். |
| 5. சமாதான பலி | லேவி 3: 1–17<br>7: 11–21<br>28–36 | தேவனை துதிப்பதற்காக | பழுதற்ற பசு / காளை |
| 6. துதிகளின் பலி | | ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டதற்காக | |
| 7. பிரமாண பலி | | பிரமாணம் நிறைவேறினதற்காக | |
| 8. சுய விருப்பமான பலி | | சந்தோஷமான இருதயத்திலிருந்து சட்டென்று வருவது. | |